துர்க்கா ஸ்ரேஷ்ட[illegible]
சுன்னாகம்.

# சோதிடமலர்

## SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| | | சூ. குரு புத சுக் | செவ் |
| ராகு | சுக்ல ஷூ வைகாசி மீ | | |
| | | | சந் கேது |
| சனி நெப் யுரே | லக் | | |

(15-5-89 — 14-6-89)

இவ்விதழில்...........

* இம்மாதம் உங்கள் பலாபலன்
* அதிஷ்டஎண் ஞானம்
* எரிந்த வீடுகள்
* கையெழுத்தும், அதன் பலனும்
* ஆய்வுமன்றம்
* வானியற் காட்சிகள்

விலை ரூபா: 4-00

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 12 ✻ இதழ் 2

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

✻

சுக்ல ௵ வைகாசி ௴
( 15 - 5 - 89 )

[illegible]
[illegible]
[illegible]
- திருத்தணீஶ்வர|

[illegible]
[illegible]
[illegible]
- ஸேனாநாயக||

✻ ✻ ✻

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்
[சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்கு
[வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்
[லையே.

✻ ✻ ✻

## சுக்கிரநீதி சில:

✻ நற்செயலால் இன்பமும் தீச்செயலால் துன்பமும் உண்டாகும். ஆதலால் அறநூல் வாயிலாக நல்லனவிவை, தீயனவிவையென உணர்ந்து நல்லனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

✻ உயிர்களிடத்து அருளும், நட்புரிமையும், கொடையும் இன்சொல்லுமாகிய இந்நான்கும் போல சிறந்த வேறெவையும் மூவுலகத்திலும் கிடைப்பதரிதாம்.

இம்மாத விசேடம்

## வைகாசி விசாகம்

சிவபெருமானது நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு அக்னிப் பொறிகளும் வாயு தேவன், அக்னிதேவன் ஆகியோரால் கங்கையில் சேர்க்கப்பட்டன. கங்கைநதி அவற்றை சரவணப் பொய்கையில் கொண்டுசேர்த்தது.

சரவணப் பொய்கையில் இவ்வாறு அக்னிப் பொறிகளும் ஆறு குழந்தைகளாக விளங்கின. காத்தற்கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியின் ஆஞ்ஞைப்படி கார்த்திகைக் கன்னிகைகள் அக்குழந்தைகட்குப் பாலூட்டினர். இவ்வாறு வளர்ச்சி அடைந்த ஆறு குழந்தைகளும் ஆறு முகங்களுடைய அழகிய ஆறுமுகப்பெருமானாக அவதரித்தன. இவ்வாறு தோன்றிய தினமே வைகாசிமாத விசாகநக்ஷத்திர தினமாகும். முருகனாக அவதரித்த தினமாதலின் இத்தினம் முருகனுக்குகந்த புண்ணிய நக்ஷத்திர விசேடதினமாக வழங்கி வருகிறது. இதையொட்டியே முருகன் ஆலயங்களில் ஆறுமுகப்பெருமான் தேரில் ஏறி ஆன்மாக்களுக்கு காட்சி கொடுக்கும் வண்ணம் விசாக நக்ஷத்திர தினத்தன்று தேர்விழாச் செய்கின்றனர். இக்காலத்தில் முருகன் ஆறுமுகனாகி சக்திகளிருவருடன் கோலாகலமாக வீற்றிருந்து அருளும் காட்சியை நாமெல்லாம் கண்கள் செய்தபயனாகக் கண்டுகளி கொள்வோமாக.

மேலும் இத்தினம் வைஷ்ணவர்கள் நம்மாழ்வார் அவதார தினமென்றும் பௌத்தர்கள் புத்த பகவான் தோன்றியதும் மோக்ஷமெய்தியதும் இத்தினமென்றும் இவ்விசாகப் பெருநாளை மதபேதமின்றிக் கொண்டாடிவருதலும் இத்தினத்தின் சிறப்புக்கு மெருகூட்டியதாக அமைகிறதெனலாம்.

# சுக்ல வருஷ வைகாசி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 42கலை 36விகலை)

| தேதி | | நாக்ஷத்ர நேர பகல் 12-00 | சூரியன் ☉ | சந்திரன் ☽ | செவ்வாய் ♂ | புதன் ☿ | குரு ♃ | சுக்கிரன் ♀ | சனி ♄ | ராகு ☊ | யுரேனஸ் ♅ | நெப்டி ♆ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே | வை | ம நி செ | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க | ரா பா க |
| 15 | 1 | 3 31 52 | 1 0 26 | 4 26 53 | 2 16 4 | 1 12 54 | 1 18 57 | 1 10 53 | 8 19 50 | 10 6 58 | 8 11 7 | 8 18 25 |
| 16 | 2 | 3 35 48 | 1 24 | 5 8 41 | 16 41 | 12 40 | 19 11 | 12 6 | 19 48 | 6 55 | 11 5 | 18 24 |
| 17 | 3 | 3 39 45 | 2 22 | 5 20 30 | 17 19 | 12 22 | 19 25 | 13 20 | 19 45 | 6 52 | 11 3 | 18 23 |
| 18 | 4 | 3 43 41 | 3 20 | 6 2 24 | 17 56 | 12 0 | 19 38 | 14 34 | 19 43 | 6 49 | 11 2 | 18 22 |
| 19 | 5 | 3 47 38 | 4 17 | 6 14 25 | 18 33 | 11 35 | 19 52 | 15 47 | 19 41 | 6 46 | 11 0 | 18 21 |
| 10 | 6 | 3 51 35 | 5 15 | 6 26 36 | 19 10 | 11 7 | 20 6 | 17 1 | 19 38 | 6 43 | 10 58 | 18 20 |
| 21 | 7 | 3 55 31 | 6 13 | 7 8 57 | 19 47 | 10 37 | 20 19 | 18 15 | 19 36 | 6 40 | 10 56 | 18 19 |
| 22 | 8 | 3 59 28 | 7 10 | 7 21 29 | 20 24 | 10 4 | 20 33 | 19 28 | 19 33 | 6 37 | 10 54 | 18 18 |
| 23 | 9 | 4 3 24 | 8 8 | 8 4 12 | 21 2 | 9 31 | 20 47 | 20 42 | 19 30 | 6 34 | 10 52 | 18 17 |
| 24 | 10 | 4 7 21 | 9 6 | 8 17 7 | 21 39 | 8 57 | 21 1 | 21 56 | 19 28 | 6 31 | 10 50 | 18 16 |
| 25 | 11 | 4 11 17 | 10 3 | 9 0 13 | 22 16 | 8 22 | 21 14 | 23 9 | 19 25 | 6 28 | 10 49 | 18 15 |
| 26 | 12 | 4 15 14 | 11 1 | 9 13 30 | 22 53 | 7 49 | 21 28 | 24 23 | 19 22 | 6 25 | 10 47 | 18 14 |
| 27 | 13 | 4 19 10 | 11 59 | 9 27 1 | 23 30 | 7 16 | 21 42 | 25 36 | 19 19 | 6 22 | 10 45 | 18 12 |
| 28 | 14 | 4 23 7 | 12 56 | 10 10 46 | 24 7 | 6 45 | 21 56 | 26 50 | 19 16 | 6 19 | 10 42 | 18 11 |
| 29 | 15 | 4 27 4 | 13 54 | 10 24 47 | 24 45 | 6 16 | 22 10 | 28 3 | 19 13 | 6 16 | 10 40 | 18 10 |
| 20 | 16 | 4 31 0 | 14 51 | 11 9 2 | 25 22 | 5 50 | 22 24 | 1 29 17 | 19 10 | 6 12 | 10 38 | 18 9 |
| 31 | 17 | 4 34 57 | 1 15 49 | 11 23 30 | 2 25 59 | 1 5 27 | 1 22 38 | 2 0 30 | 8 19 6 | 10 6 8 | 8 10 36 | 8 18 7 |
| 1 | 18 | 4 38 53 | 1 16 46 | 0 8 8 | 2 26 36 | 1 5 7 | 1 22 51 | 2 1 44 | 8 19 3 | 10 6 5 | 8 10 34 | 8 18 6 |
| 2 | 19 | 4 42 50 | 17 44 | 0 22 50 | 27 14 | 4 51 | 23 5 | 2 57 | 19 0 | 6 2 | 10 32 | 18 5 |
| 3 | 20 | 4 46 46 | 18 41 | 1 7 29 | 27 51 | 4 39 | 23 19 | 4 11 | 18 56 | 5 59 | 10 30 | 18 3 |
| 4 | 21 | 4 50 43 | 19 39 | 1 21 57 | 28 28 | 4 31 | 23 33 | 5 24 | 18 53 | 5 56 | 10 27 | 18 2 |
| 5 | 22 | 4 54 39 | 20 36 | 2 6 7 | 29 5 | 4 27 | 23 47 | 6 38 | 18 49 | 5 53 | 10 25 | 18 1 |
| 6 | 23 | 4 58 36 | 21 34 | 2 19 55 | 29 42 | 4 28 | 24 1 | 7 51 | 18 45 | 5 50 | 10 23 | 17 59 |
| 7 | 24 | 5 2 33 | 22 31 | 3 3 18 | 3 0 20 | 4 33 | 24 15 | 9 5 | 18 42 | 5 47 | 10 21 | 17 58 |
| 8 | 25 | 5 6 29 | 23 29 | 3 16 16 | 0 57 | 4 43 | 24 29 | 10 18 | 18 38 | 5 44 | 10 18 | 17 56 |
| 9 | 26 | 5 10 26 | 24 26 | 3 28 51 | 1 34 | 4 57 | 24 43 | 11 31 | 18 34 | 5 40 | 10 16 | 17 55 |
| 10 | 27 | 5 14 22 | 25 23 | 4 11 7 | 2 12 | 5 15 | 24 57 | 12 45 | 18 30 | 5 36 | 10 14 | 17 53 |
| 11 | 28 | 5 18 19 | 26 21 | 4 23 9 | 2 49 | 5 38 | 25 11 | 13 58 | 18 26 | 5 33 | 10 11 | 17 52 |
| 12 | 29 | 5 22 15 | 27 18 | 5 5 3 | 3 26 | 6 6 | 25 24 | 15 11 | 18 22 | 5 30 | 10 9 | 17 50 |
| 13 | 30 | 5 26 12 | 28 16 | 5 16 53 | 4 3 | 6 38 | 25 38 | 16 25 | 18 18 | 5 27 | 10 7 | 17 49 |
| 14 | 31 | 5 30 8 | 1 29 13 | 5 28 44 | 3 4 41 | 1 7 14 | 1 25 52 | 2 17 38 | 8 18 14 | 10 5 24 | 8 10 4 | 8 17 47 |

ஜூன் 1989

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்: தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீட்சை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (வைகாசி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

**(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)**

| வாரம் | 5...53<br>6...53 | 6...53<br>7...53 | 7...53<br>8...53 | 8...53<br>9...53 | 9...53<br>10...53 | 10...53<br>11...53 | 11...53<br>12...53 | 12...53<br>1...53 | 1...53<br>2...53 | 2...53<br>3...53 | 3...53<br>4...53 | 4...53<br>5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் நலமா?

வை 1 திங் (15-5-89) தசமி-சித்தம் பகல் 1-22 வ. உத்தரம் முழுவதும், சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 7-23—8-56

வை 2 செவ் (16-5-89) ஏகாதசி பகல் 3-57 வரை, உத்தரம் காலை 8-10 வரை, அமிர்தசித்தம், ஸர்வஏகாதசிவிரதம், வயற்செய்கைக்கு உகந்த தினம். ராகு 2-53—4-26

வை 3 புத (17-5-89) துவாதசி மாலை 6-24 வரை, அத்தம் பகல் 11-14 வரை, சித்தம், நற்கருமங்கட்கு சிறந்தது. ராகு 11-53—1-26

வை 4 வியா (18-5-89) திரயோதசி இரவு 8-35 வ, சித்திரை பகல் 2-03 வரை, சித்தாமிர்தம், பிரதோஷவிரதம், நற்கருமங்கள் செய்ய நன்று. ராகு 1-23—2-56

வை 5 வெ (19-5-89) சதுர்த்தசி இரவு 10-24 வ. சுவாதி மாலை 4-33 வரை, சித்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 10-22—11-55

வை 6 சனி (20-5-89) பூரணை இரவு 11-47 வரை, விசாகம் மாலை 6-38 வரை, சித்தம், வைகாசி விசாகம், பூரணைவிரதம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 8-52—10-25

வை 7 ஞாயி (21-5-89) பிரதமை பி.இ. 12-45 வ. அனுஷம் இரவு 8-19 வரை, மரணம், கரிநாள், அசுபதினம். ராகு 4-22—5-55

வை 8 திங் (22-5-89) துவிதியை பி.இ. 1-19 வ. கேட்டை இரவு 9-37 வரை, சித்தம், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 7-22—8-56

வை 9 செவ் (23-5-89) திரிதியை பி.இ. 1-30 வ. மூலம் இரவு 10-31 வரை, அமிர்தசித்தம் வயற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 2-52—4-26

வை 10 புத (24-5-89) சதுர்த்தி பி.இ. 1-17 வரை, பூராடம் இரவு 11-03 வரை, அமிர்தம், அசுபதினம். ராகு 11-52—1-26

வை 11 வியா (25-5-89) பஞ்சமி-சித்தம் பி.இ. 12-42 வரை, உத்தராடம் இரவு 11-13 வரை, நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 1-26—2-56

வை 12 வெ (26-5-89) ஷஷ்டி இரவு 11-44 வ. திருவோணம்-மரணம் இரவு 11-00 வரை, சுப கருமங்களை விலக்குக. ராகு 10-22—11-56

வை 13 சனி (27-5-89) ஸப்தமி இரவு 10-21 வ. அவிட்டம் இரவு 10-23 வரை, சித்தம், சுப கருமங்களுக்கு உகந்தது. ராகு 8-52—10-26

வை 14 ஞாயி (28-5-89) அஷ்டமி இரவு 8-35 வ. சதயம் இரவு 9-22 வரை, சித்தம், அக்கினிநாள் முடிபு, அசுபதினம். ராகு 4-22—5-56

வை 15 திங் (29-5-89) நவமி மாலை 6-26 வரை, பூரட்டாதி-மரணம் இரவு 7-58 வரை, அசுப தினம். ராகு 7-22—8-56

வை 16 செவ் (30-5-89) தசமி பகல் 3-55 வரை, உத்தரட்டாதி மாலை 6-13 வரை, அமிர்தம், கரிநாள், வயற்கருமங்களுக்கு நன்று. ராகு 2-52—4-26

வை 17 புத (31-5-89) ஏகாதசி பகல் 1-07 வரை, ரேவதி மாலை 4-12 வரை, மரணம், கரிநாள், ஸர்வஏகாதசிவிரதம், அசுபதினம். ராகு 11-52—1-26

வை 18 வியா (1-6-89) துவாதசி பகல் 10-07 வ. அசுவினி பகல் 2-00 வரை, அமிர்தசித்தம், பிரதோஷவிரதம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 1-22—2-56

வை 19 வெள் (2-6-89) திரயோதசி காலை 7-05 வ. சதுர்த்தசி பி. இ. 4-07 வரை, பரணி பகல் 11-46 வரை, சித்தம், காரத்திகைவிரதம், சுபதினமன்று, ராகு 10-22—11-56

வை 20 சனி (3-6-89) அமாவாசை பி.இ. 1-24 வ. கார்த்திகை காலை 9-40 வரை, அமிர்தசித்தம், அமாவாசைவிரதம் சுபதினமன்று, ராகு 8-52—10-26

வை 21 ஞாயி (4-6-89) பிரதமை இரவு 11-04 வ. ரோகிணி காலை 7-50 வரை, சித்தம், சுபகருமங்களுக்கு நன்று. ராகு 4-22—5-56

வை 22 திங் (5-6-89) துவிதியை இரவு 9-17 வ. மிருகசீரிடம் காலை 6-26 வரை, திருவாதிரை பி.இ. 5-39 வரை, அமிர்தசித்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-22—8-56

வை 23 செவ் (6-6-89) திருதியை இரவு 8-11 வ. புனர்பூசம் பி.இ. 5-34 வரை, சித்தம், வயற்செய்கைக்கு நன்று. ராகு 2-52—4-26

வை 24 புத (7-6-89) சதுர்த்தி மாலை 7-52 வ. பூசம், முழுவதும், சித்தம், சதுர்த்திவிரதம், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 11-52—1-26

வை 25 வியா (8-6-89) பஞ்சமி இரவு 8-19 வரை, பூசம் காலை 6-16 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்களுக்கு நன்று. ராகு 1-22—2-56

வை 26 வெள் (9-6-89) ஷஷ்டி இரவு 9-33 வரை, ஆயிலியம் காலை 7-44 வரை மரணம், ஷஷ்டி விரதம், அசுபதினம். ராகு 10-22—11-56

வை 27 சனி (10-6-89) ஸப்தமி இரவு 11-24 வரை, மகம் காலை 9-54 வரை, அமிர்தசித்தம், சுபகருமங்களுக்கு நன்று. ராகு 8-53—10-27

வை 28 ஞாயி (11-6-89) அஷ்டமி பி.இ. 1-40 வ. பூரம் பகல் 12-34 வரை, சித்தாமிர்தம், அசுப தினம். ராகு 4-23—5-57

வை 29 திங் (12-6-89) நவமி பி.இ. 4-09 வரை, உத்தரம் பகல் 3-33 வரை, சித்தம் சுபதினமன்று. ராகு 7-23—5-57

வை 30 செவ் (13-6-89) தசமி முழுவதும், அத்தம் மாலை 6-35 வரை, சித்தம், விவசாயச் செய்கைக்கு நன்று. ராகு 2-53—4-27

வை 31 புத (14-6-89) தசமி காலை 6-34 வரை, சித்திரை இரவு 9-27 வரை, சித்தம், சுபகருமங்கள் செய்ய நன்று. ராகு 11-53—1-27

## திருக்கணிதமே ஏற்றது

நம் நாட்டில் பல பஞ்சாங்கங்கள் பழக்கத்திலிருப்பதால் எப்பஞ்சாங்கம் சரிவரக் கிரகநிலைகளைக் காட்டுகிறது என்பது மிகவும் குழப்பமாகவுள்ளது. ஆகாயத்தில் தெரியும் கிரகங்களின் காட்சிகளையும், அதன் பாதையையும் எந்தப் பஞ்சாங்கம் எப்பொழுதும் சரிவரக் குறிப்பிடுகின்றதோ அதனையே நாம் உபயோகித்தல் வேண்டும். இதனை நாம் நிரூபணம் செய்ய பஞ்சாங்கத்திலுள்ள சந்திர உதயம், சந்திர அஸ்தமனம், கிரகங்களின் சேர்க்கை சமாகமம், கிரகணம் என்பவற்றின் மூலம் அறிந்துகொள்ளலாம். இதற்கு உதவியாக இருப்பது திருக்கணித பஞ்சாங்கமே. பல பஞ்சாங்கங்கள் நடைமுறையில் இருந்தாலும் திருக்கணித பஞ்சாங்கம் மட்டுமே கிரகநிலைகளைச் சரிவரக் குறிப்பிடுகிறது. இதனை அறிவதற்குத்தான் மேல் நாட்டு புத்தகங்களும் (Ephemeris) நம் பாரத தேசத்தில் கணிக்கப்படும் நாட்டிக்கல் ஆல்மனக்கும், நம் பஞ்சாங்கமும் உதவியாக இருக்கின்றன. இவை கிரகநிலைமையின் போக்கை அறிந்து தினந்தோறும் திருத்தம் (Correction) செய்யப்பட்டவையாகும். எனவே திருக்கணித பஞ்சாங்கத்தையே நாம் உபயோகிக்கவேண்டும்.

— 'ஞானபூமி' - ஏப்ரல் 89.

## புத்தர் வாழ்வின் பெருநெறியில்

கல்வயலூர் செல்வி கயல்விழி அருளம்பலம்

புத்தர் வாழ்வின் பெருநெறியை
போற்றி பணிதல் மனுநெறியாம்
செத்தும் வாழும் வாழ்வினையே
இத்தரை நாமும் தொழுதிடுவோம்

அன்பால் இந்த மண்ணுலகை
அணைத்த செம்மல் புத்தரன்றோ
என்றும் எதிலும் பற்றின்றி
நன்றே வாழ்ந்த சித்தரவர்.

கொலையைத் துறக்க வேண்டுமென
குரலைக் கொடுத்த தலைவரவர்
அலையும் மனதை அடக்கென்றே
ஆணை யிட்ட அறிஞரவர்.

ஆசை போக்கி அகத்திடையே
அறத்தை தேக்கும் அண்ணலவர்
பாகம் மோசம் என்றுணர்ந்த
தேசம் உணர்த்திய செம்மலவர்.

பற்றினை விட்டிடில் வீடென்றும்
பற்றினில் விளைவது கேடென்றும்
முற்றும் உணர்ந்திட்ட புத்தரவர்
வற்றுஞா னமுற்ற சித்தரவர்.

புத்தர் வாழ்வின் பெருநெறியை
இத்தரை போற்றி பணிந்திடுமே
சித்தம் கலங்கி சிதறுமல்
நித்தம் வாழ்வைப் பெறுவோமே.

## நாய் குரைத்தால்....!

சூரியனைப் பார்த்து நாய்கள் குரைத்தால் அக்கிராமத்தில் கலகமும், அரசாங்கத்தில் குழப்பமுமுண்டாகும். தென்கீழ்த் திசையில் நின்று காலையில் சூரியனைப்பார்த்துக் குரைத்தால், அக்னி திருடரால் உடன்பயமேற்படும். மத்தியானத்தில் குரைத்தால் அக்னியால் மரணமும், மாலையில் குரைத்தால் அடிக்கடி சண்டையுமேற்படும். அர்த்தராத்திரியில் நாய் குரைத்தால் பிராமணர்களுக்குத் துன்பமும், பசுக்களைக் கள்வர் கவர்தலும் உண்டாகும். மழைகாலத்தில் குப்பைமேட்டில் அல்லது வீட்டுச்சியில் நின்று குரைத்தால் அதிகமழை கொட்டும்.

— மது


# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

## சுக்ல ஹு வைகாசி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (15-5-89 முதல் 14-6-89 வரை)

| இங் மே | தமி வை | வாரம் | இடபம் ம.மி. முதல் (காலை) | இடபம் ம.மி. வரை | மிதுனம் ம.மி. வரை (காலை) | கடகம் ம.மி. வரை (பகல்) | சிங்கம் ம.மி. வரை (பகல்) | கன்னி ம.மி. வரை (பி.ப) | துலா ம.மி. வரை (மாலை) | விருச்சி ம.மி. வரை (இரவு) | தனுசு ம.மி. வரை (இரவு) | மகரம் ம.மி. வரை (இரவு) | கும்பம் ம.மி. வரை (பி.இ) | மீனம் ம.மி. வரை (பி.இ) | மேடம் ம.மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | திங் | 5 53 | 8 1 | 10 13 | 12 20 | 2 21 | 4 20 | 6 24 | 8 34 | 10 42 | 12 38 | 2 23 | 4 5 | 5 55 |
| 16 | 2 | செவ் | 5 55 | 7 58 | 10 10 | 12 17 | 2 18 | 4 17 | 6 21 | 8 31 | 10 39 | 12 35 | 2 20 | 4 2 | 5 52 |
| 17 | 3 | புதன் | 5 52 | 7 54 | 10 6 | 12 13 | 2 14 | 4 13 | 6 17 | 8 27 | 10 35 | 12 31 | 2 16 | 3 58 | 5 48 |
| 18 | 4 | வியா | 5 48 | 7 50 | 10 2 | 12 9 | 2 10 | 4 9 | 6 13 | 8 23 | 10 31 | 12 27 | 2 12 | 3 54 | 5 44 |
| 19 | 5 | வெள் | 5 44 | 7 46 | 9 58 | 12 5 | 2 6 | 4 5 | 6 9 | 8 19 | 10 27 | 12 23 | 2 8 | 3 50 | 5 40 |
| 20 | 6 | சனி | 5 41 | 7 42 | 9 54 | 12 1 | 2 2 | 4 1 | 6 5 | 8 15 | 10 23 | 12 19 | 2 4 | 3 46 | 5 36 |
| 21 | 7 | ஞாயி | 5 37 | 7 38 | 9 50 | 11 57 | 1 58 | 3 57 | 6 1 | 8 11 | 10 19 | 12 15 | 2 0 | 3 42 | 5 32 |
| 22 | 8 | திங் | 5 33 | 7 34 | 9 46 | 11 53 | 1 54 | 3 53 | 5 57 | 8 7 | 10 15 | 12 11 | 1 56 | 3 38 | 5 28 |
| 23 | 9 | செவ் | 5 29 | 7 30 | 9 42 | 11 49 | 1 50 | 3 49 | 5 53 | 8 3 | 10 11 | 12 7 | 1 52 | 3 34 | 5 24 |
| 24 | 10 | புதன் | 5 25 | 7 26 | 9 38 | 11 45 | 1 46 | 3 45 | 5 49 | 7 59 | 10 7 | 12 3 | 1 48 | 3 30 | 5 20 |
| 25 | 11 | வியா | 5 20 | 7 22 | 9 34 | 11 41 | 1 42 | 3 41 | 5 45 | 7 55 | 10 3 | 11 59 | 1 44 | 3 26 | 5 16 |
| 26 | 12 | வெள் | 5 17 | 7 18 | 9 30 | 11 37 | 1 38 | 3 37 | 5 41 | 7 51 | 9 59 | 11 55 | 1 40 | 3 22 | 5 12 |
| 27 | 13 | சனி | 5 13 | 7 14 | 9 26 | 11 33 | 1 34 | 3 33 | 5 37 | 7 47 | 9 55 | 11 51 | 1 36 | 3 18 | 5 8 |
| 28 | 14 | ஞாயி | 5 9 | 7 10 | 9 22 | 11 29 | 1 30 | 3 29 | 5 33 | 7 43 | 9 51 | 11 47 | 1 32 | 3 14 | 5 4 |
| 29 | 15 | திங் | 5 5 | 7 6 | 9 18 | 11 25 | 1 26 | 3 25 | 5 29 | 7 39 | 9 47 | 11 43 | 1 28 | 3 10 | 5 0 |
| 30 | 16 | செவ் | 5 1 | 7 2 | 9 14 | 11 21 | 1 22 | 3 21 | 5 25 | 7 35 | 9 43 | 11 39 | 1 24 | 3 6 | 4 56 |
| 31 | 17 | புதன் | 4 57 | 6 58 | 9 10 | 11 17 | 1 18 | 3 17 | 5 21 | 7 31 | 9 39 | 11 35 | 1 20 | 3 2 | 4 52 |
| ஜூன் 1989 | | | | | | | | | | | | | | | |
| 1 | 18 | வியா | 4 53 | 6 54 | 9 6 | 11 13 | 1 14 | 3 13 | 5 17 | 7 27 | 9 35 | 11 31 | 1 16 | 2 58 | 4 48 |
| 2 | 19 | வெள் | 4 49 | 6 50 | 9 2 | 11 9 | 1 10 | 3 9 | 5 13 | 7 23 | 9 31 | 11 27 | 1 12 | 2 54 | 4 44 |
| 3 | 20 | சனி | 4 45 | 6 46 | 8 58 | 11 5 | 1 6 | 3 5 | 5 9 | 7 19 | 9 27 | 11 23 | 1 8 | 2 50 | 4 40 |
| 4 | 21 | ஞாயி | 4 41 | 6 42 | 8 54 | 11 1 | 1 2 | 3 1 | 5 5 | 7 15 | 9 23 | 11 19 | 1 4 | 2 46 | 4 36 |
| 5 | 22 | திங் | 4 37 | 6 38 | 8 50 | 10 57 | 12 58 | 2 57 | 5 1 | 7 11 | 9 19 | 11 15 | 1 0 | 2 42 | 4 32 |
| 6 | 23 | செவ் | 4 33 | 6 34 | 8 46 | 10 53 | 12 54 | 2 53 | 4 57 | 7 7 | 9 15 | 11 11 | 12 56 | 2 38 | 4 28 |
| 7 | 24 | புதன் | 4 29 | 6 30 | 8 42 | 10 49 | 12 50 | 2 49 | 4 53 | 7 3 | 9 11 | 11 7 | 12 52 | 2 34 | 4 24 |
| 8 | 25 | வியா | 4 25 | 6 26 | 8 38 | 10 45 | 12 46 | 2 45 | 4 49 | 6 59 | 9 7 | 11 3 | 12 48 | 2 30 | 4 20 |
| 9 | 26 | வெள் | 4 21 | 6 22 | 8 34 | 10 41 | 12 42 | 2 41 | 4 45 | 6 55 | 9 3 | 10 59 | 12 44 | 2 26 | 4 16 |
| 10 | 27 | சனி | 4 17 | 6 18 | 8 30 | 10 37 | 12 38 | 2 37 | 4 41 | 6 51 | 8 59 | 10 55 | 12 40 | 2 22 | 4 12 |
| 11 | 28 | ஞாயி | 4 13 | 6 14 | 8 26 | 10 33 | 12 34 | 2 33 | 4 37 | 6 47 | 8 55 | 10 51 | 12 36 | 2 18 | 4 8 |
| 12 | 29 | திங் | 4 19 | 6 10 | 8 22 | 10 29 | 12 30 | 2 29 | 4 33 | 6 43 | 8 51 | 10 47 | 12 32 | 2 14 | 4 4 |
| 13 | 30 | செவ் | 4 5 | 6 6 | 8 18 | 10 25 | 12 26 | 2 25 | 4 29 | 6 39 | 8 47 | 10 43 | 12 28 | 2 10 | 4 0 |
| 14 | 31 | புதன் | 4 1 | 6 2 | 8 14 | **10 21** | **12 22** | 2 21 | 4 25 | 6 35 | 8 43 | 10 39 | 12 24 | 2 6 | 3 56 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நாழிகை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: வைகாசி 31உ (14-6-89) பகல் 11-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-21—12-22) சிங்கலக்னம்

# வைகாசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

16உ (30-5-89) மாலை 7-33க்கு மிது-சுக்
23உ (6-6-89) மாலை 4-46க்கு கட-செவ்
2உ புதன் அஸ்தமனம்
18உ புதன் உதயம்
23உ புதன் வக்ரத்தியாகம்
14உ குரு அஸ்தமனம்

இம்மாதம் சனி, யுரேனஸ், நெப்டியூன், வக்ரத்தில் சஞ்சாரம் செய்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வை 1உ | (15-5-89) | பகல் | 11-50 | முதல் | கன்னி |
| 3உ | (17-5-89) | இரவு | 12-40 | ,, | துலாம் |
| 6உ | (20-5-89) | பகல் | 12-09 | ,, | விருச்சிகம் |
| 8உ | (22-5-89) | இரவு | 9-36 | ,, | தனுசு |
| 10உ | (24-5-89) | பி.இ. | 5-07 | ,, | மகரம் |
| 13உ | (27-5-89) | பகல் | 10-44 | ,, | கும்பம் |
| 15உ | (29-5-89) | பகல் | 2-21 | ,, | மீனம் |
| 17உ | (31-5-89) | மாலை | 4-11 | ,, | மேடம் |
| 19உ | (2-6-89) | பகல் | 5-13 | ,, | இடபம் |
| 21உ | (4-6-89) | மாலை | 7-04 | ,, | மிதுனம் |
| 23உ | (6-6-89) | இரவு | 11-31 | ,, | கடகம் |
| 26உ | (9-6-89) | காலை | 7-44 | ,, | சிங்கம் |
| 28உ | (11-6-89) | மாலை | 7-17 | ,, | கன்னி |
| 31உ | (14-6-89) | காலை | 8-03 | ,, | துலாம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி வைகாசி மீ 31உ பகல் 11-30 மணிக்கு சிங்க லக்னம் என அறிந்து கொண்ட பின் 'சிங்கம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது விருச்சிகலக்னம் உதயமாகின்றது. இலக்கினத்தை வியாழன் நோக்குவது நன்றாயினும், 2ல் சனி பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தும். சந்திரனுடன் கேது சஞ்சரிப்பதால் அமைதிக்குறைவு இடையிடையே இருக்கும். கல்விஸ்தாபனங்கள் சரிவரச் செயல்படுவதில் தாமதங்கள் காணும்.

# வைகாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

**15-5-89 – 14-6-89**

| | | |
|---|---|---|
| சூரியன்:- | 14-5-89 | இரவு 6-34 இடபராசிப் பிரவேசம் |
| | 15-5-89 | உதயம் காலை 5-53 |
| | 15-5-89 | உச்சம் பகல் 12-06 |
| | 15-5-89 | அஸ்தமனம் மாலை 6-19 |
| | 30-5-89 | உதயம் காலை 5-52 |
| | 30-5-89 | உச்சம் பகல் 12 07 |
| | 30-5-89 | அஸ்தமனம் மாலை 6-23 |
| சந்திரன்:- | 20-5-89 | பூரணை இரவு 11-47 வரை |
| | 3-6-89 | அமாவாசை பி.இ 1-24 வ. |
| | 5-6-89 | சந்திரதரிசனம். |

## கிரகங்கள்

புதன்:- வக்கிரகதியில் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் 16-5-89ல் மேற்கில் அஸ்தமனமாகி 1-6-89ல் கிழக்கில் உதயமாகும். 6-6-89ல் நேர்கதியில் செல்லத் தொடங்கும். மாதமுடிவில் சூரியஉதயம் முன் கிழக்குவானில் 22பாகை உயரத்தில் காணப்படும். இது இடபராசியிலேயே சஞ்சரிக்கிறது.

சுக்கிரன்:- மாதாரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 10பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 30-5-89ல் மிதுனராசியில் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாதத்தொடக்கத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 45பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 35பாகை உயரத்தில் தோன்றும்; இது 6-6-89ல் கடகராசியில் பிரவேசிக்கிறது.

வியாழன்:- மாதாரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 19பாகை உயரத்தில் தோன்றும் இக்கிரகம் 28-5-89ல் மேற்கில் அஸ்தமனமடையும். இது இடபராசியிலேயே சஞ்சரிக்கிறது,

சனி:- வக்கிரகதியில் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் மாதத்தொடக்கத்தில் சூரிய உதயத்தின் முன் மேற்குவானில் 51 பாகை உயரத்தில் காணப்படும். இக்கிரகம் மாதமுடிவில் மேற்குவானில் 19பாகை உயரத்தில் காணப்படும். இது தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

யுரேனஸ்:- இம்மாதம் வக்கிரகதியில் தனுராசியில் சஞ்சரிக்கிறது.

நெப்டியூன்:- இந்தமாதம் வக்கிரகதியில் தனுராசியில் சஞ்சரிக்கிறது.

புளுட்டோ:- இம்மாதம் வக்கிரகதியில் துலாராசியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

16-5-89 நண்பகல் புதனுக்கு தெற்கு சுக்கிரன் ½பாகை. அன்று சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்க. அன்று புதன் அஸ்தமனமாவதால் புதனைப் பார்ப்பது கஷ்டம்.

21-5-89 மாலையில் சந்திரனுக்கு வடக்கில் ஒட்டினாற்போல் கேட்டை நட்சத்திரம் காணப்படும்:

23-5-89 காலையில் சுக்கிரனுக்கு தெற்கு வியாழன் ½பாகை. அன்று சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் அவதானிக்க.

24-5-89 முற்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 4½பாகை. சூரியஉதயத்தின் முன் அவதானிக்கவும்.


2-6-89 நள்ளிரவு சந்திரனுக்கு தெற்கு புதன் 9பாகை. விடியும் முன் பார்க்கவும்.

4-6-89 காலையில் சந்திரனுக்கு தெற்கு வியாழன் 5பாகை. சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

5-6-89 காலையில் சந்திரனுக்கு தெற்கு சுக்கிரன் 3½பாகை. சந்திரதரிசனத்துடன் பார்க்கவும்.

6-6-89 நள்ளிரவு சந்திரனுக்கு தெற்கு செவ்வாய் 1½பாகை. அன்று மாலையில் அவதானிக்கலாம்.

9 6-89 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கில் மக நட்சத்திரம் சமீபமாகக் காணப்படும்.



# இம்மாதம் உங்களுக்கு எப்படி

இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

**14-5-89 முதல் 15-6-89 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் ரஜச மூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபெலம் பெருமையால் நன்மை தீமை கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராகவிருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதம் பொருள் வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். முன்பு இழுபறி நிலையிலிருந்த காரியங்களிலும் சித்தி பெறுவதுடன் விற்றல் வாங்கல் மூலம் லாபங்களும் கிடைக்கும். வீட்டில் அல்லது நெருங்கிய இனபந்துக்களுக்குள் சுபமங்கல கொண்டாட்டங்களும் நிகழக்கூடும். புத்திரர் - நண்பர்கள் - பெரியவர்கள் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும் எனினும் பிரயாணத்தில் துன்பம், வீண்செலவு, சிரசு, முகம் சம்பந்தமான பிணி பீடைகளும் இலருக்கு ஏற்படவும் கூடும்.

குடும்பத்தவர்களுக்குப் பெரும்பாலும் மன நிறைவான சம்பவங்கள் நிகழும். குடும்பவருமானம் கணிசமாகக் கூடும். புத்திரர் உதவிகள் ஒத்தாசைகள் கிடைக்கும். கணவன் மனைவி உறவும் சீராக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். பழைய கடன் நிலுவைகளைக் கூட அறவிட்டுக்கொள்ளுவார்கள். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் சிறப்பான முன்னேற்றம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சி முதலானவை இழுபறி நிலையிலேயே இருக்கும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு தொடரும். இயற்கை செயற்கை ஏதுக்களின் தாக்கங்களால் விளைவும் பெருமளவில் குறைவுறும். குத்தகை

விவசாயிகள் கடன் முதலீடுகள் செய்வதைத் தவிர்த்தல் நல்லது. வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். வேலைத்தலங்களில் விபத்துக்கள் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. எவ்வகையில் பார்த்தாலும் இவர்களின் வாழ்க்கைத்தரமும் குன்றும்.

மாணவர் கல்வியூக்கம் வளர்ச்சியடையும். முக்கியமாகக் கணிதவிஞ்ஞானத்துறை மாணவர் சிறப்படைவர். வெளிநாடுகளில் புலமைப் பரிசில்கள் கூடப் பெறமுடியும்.

பெண்களுக்கு இம்மாதமும் மனநிறைவானதாகவே அமையலாம். கன்னிப் பெண்களின் விவாகப் பிரச்சினைகளும் பெரும்பாலும் சாதகமாக முன்னேற்றம் பெறும். உத்தியோகப் பெண்களுக்கும் மேலதிகாரிகளின் உதவிகளும் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- மே 22இர.23,24,28,31இர.
ஜூன் 1,2பக.5,6,9பக.10.

துரதிஷ்ட நாட்கள்:-மே 16,17,21 22பக.30,31ப.
ஜூன் 11,12,13,14.



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2

இடபராசிக்காரருக்கு இம்மாதம் சூரியபகவான் 1ல் (ஜென்மத்தில்) லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்கமுடியாது. பொதுவாக இவர்களின் தேகசுகமும், குடும்பசுகமும் அடிக்கடி பாதிப்படையும். வருமானத்திலும் பார்க்கச் செலவுகள் அதிகரிப்பதால் கடன்பயமும் ஏற்படும். எந்த முயற்சிகளிலும் தடையும், அலைச்சலும், வீண் செலவும், ஏமாற்றமும் இவர்களுக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. சிலருக்குத் தாங்கொணா மனவேதனைகளால் ஒழிந்து மறைந்து வாழவேண்டியும் நேரலாம். இராசியில் குருவும், புதனும், சுக்கிரனும் சேர்ந்திருப்பதால் சிலருக்கு மேற்கூறிய பலன்களுக்கு எதிர்மாறுகச் சுபபலன்களும் நிகழக்கூடும்.

குடும்பத்தில் பிணிபீடைகளும் சச்சரவுகளும் அடிக்கடி ஏற்படும். புத்திரர் உறவினர் உதவிகளுக்குப் பதில் துன்பங்களே ஏற்படும். குடும்ப வருமானம் பெரிதும் குன்றும்.

வர்த்தகர்களுக்கு நிதிநெருக்கடிகள் ஏற்படும். வர்த்தக நிலையங்களில் ஊழியர்களுடன் கருத்து வேறுபாடுகளும் வாடிக்கையாளர்களுடன் விரோதங்களும் ஏற்படுதலால் வியாபாரம் பெரிதும் பாதிப்படையும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குன்றுவதால் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துதல் கடினம். சிலருக்குப் பதவிநீக்கம் அல்லது பதவியிறக்கமும் கஷ்டப்பிரதேச இடமாற்றங்களும் கிடைக்கக்கூடும்.

விவசாயிகளுக்குச் சனியின் பலம் குன்றுவதால் இயற்கை, செயற்கை ஏதுக்களால் பயிரழிவு தொடருவதுடன் விளைச்சலும் குன்றும். பொதுவாகக் கடன் முதலீடுகளில் விவசாயம் செய்வதை தவிர்த்தல் நல்லது.

தொழிலாளருக்குள் சச்சரவுகளும் தொழில் பிணக்குகளும் அடிக்கடி தோன்றும். வேலையில் லாப் பிரச்சினை வளரும். தொழிற்சாலைகளிலும் இவர்கள் விபத்துக்களை எதிர்கொள்ளவும் கூடும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படும். சூரியனும் புதனும் சுக்கிரனும்சேர்ந்து சஞ்சரிப்பதால் சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் சித்தியடைவார்கள்.

பெண்களுக்குச் ஜென்மகுருவும் 2ல் செவ்வாயும் அட்டமத்துச்சனியும் சேர்ந்த கோசாரசஞ்சாரம் நிகழுதலால் மனநிறைவு பெறுவது கடினம். விவாகப்பிரச்சினைகள் இழுபறிநிலையில் அல்லது ஏமாற்றத்தில் முடியும்.

அதிஷ்ட நாட்கள்:- மே 17,25பக.26,30,31.
ஜூன் 3,4பக.7,8,12,13.

துரதிஷ்ட நாட்கள்;-மே 18,19,23,24,25கா.
ஜூன் 1,2பக.14பக.



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுன இராசியில் பிறந்தவர்க்கு இந்தமாதம் சூரியபகவான் 12ல் (விரையத்தில்) தாம்பர மூர்த்தியாக வலம் வருகின்றூர். சூரியன் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பொதுவாக இவர்களின் தேகசுகம் குறையும். பொருள் வரு

மானமும் குறையும். எந்த முயற்சிகளிலும் அலைச்சலும், வீண்செலவுகளும், ஏமாற்றங்களும் இவர்களுக்கு ஏற்படும். இனசனப்பகை, பொருள் நட்டம், தொழில் இழப்பு, புத்திரர் வழித்துன்பம் என்பனவும் சிலருக்கு நிகழும். சுக்கிரன் கேது ஆகிய இருவரைத் தவிர மற்றை எல்லாக் கிரகங்களும் கோசார சஞ்சாரபலம் குறைவது இவர்களின் துரதிஷ்டமே! எவ்வாறாயினும் நவக்கிரக-தெய்வ வழிபாடுகளுடையவர்கள் சாந்திபெறுவர்.

குடும்பத்தில் பிணி பீடைகள் இடைக்கிடை ஏற்படும். குடும்ப அமைதியும் நல்லுறவும் ஏற்படுவதும் கடினம். குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டே போகும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற்படும். பொதுவாக நிதிநெருக்கடிகள் ஏற்படுவதால் லாபம் குறைவுறும். முதலீடுகளைக் கூடியவரை குறைப்பது நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் துன்பம் தருவார்கள். சிலர் பதவி இறக்கம் அல்லது பதவிநீக்கம் கூடப்பெற்றாலும் ஆச்சரியமில்லை. சக உத்தியோகத்தர்களின் உதவிகளும் உண்டு.

விவசாயிகளுக்குப் பயிர்விளைச்சல் குறையும். உற்பத்திச் செலவும் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் குறையும். சந்தைப்படுத்துவதிலும் சிரமங்கள் தொடரும்.

தொழிலாளர் மத்தியில் குழப்பங்கள் அடிக்கடி ஏற்படும். வேலையில்லாப் பிரச்சினை இவர்களுக்குப் பெரிதும் துன்பம் தரும். வேலைகளில் எதிர்பார்த்தபடி லாபம் கிடையாது.

மாணவர் கல்வி முன்னேற்றம் தடைப்படுதலால் மாணவர் மத்தியில் அமைதியின்மையும் வெறுப்புணர்ச்சியும் தோன்றும். பரீட்சை முடிவுகளும் திருப்தியளிக்காது.

பெண்களுக்கு இந்தமாதமும் மனநிறைவு பெறுவது கடினம். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் இழுபறியாகவே இருக்கும். திடீர் நெருக்கடிகள் பெண்களுக்குக் கவலைதரும்.

அதிஷ்டநாட்கள்: மே 18,19,28,31இரவு
ஜூன் 5,6,9பக.10,14பக.

துரதிஷ்டநாட்கள்: மே 21,22பக.25பக.26
ஜூன் 2இர.3,4பக.



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரிய பகவான் 11ல் (லாபத்தில்) ரஜஸ மூர்த்தியாகப் பலம்பெறுவது நன்மையாகும். செவ்வாய் இராகு கேதுக்கள் தவிர மற்ற எல்லாக் கிரகங்களும் கோசார சஞ்சாரபலம் பெறுவது சிறப்பாகும். இவர்களின் தேகசுகம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் கூடும். விற்றல் வாங்கல் மூலம் இவர்கள் நல்ல ஆதாயம் பெறுவர். இராசாங்க உதவிகளும் பெறுவர். விபத்துக்கள் அவமிருத்துக்குள்ளாதல் வாக்கு விரோதங்கள் முதலானவையும் சிலருக்கு உண்டாகும். வீட்டில் மங்கல காரியங்களும் நிகழச் சாதகமான காலம்.

குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் அவ்வப்போது தோன்றி மறைந்தாலும் பெரும்பாலும் அமைதியே நிலவும். புத்திரர்-பெரியவர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாப வருமானமும் கிடைக்கும். வியாபாரம் நல்ல முன்னேற்றம் பெறும். புதிய முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிச் சிறப்பு அல்லது பதவி உயர்ச்சி முதலானவை கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் லாபம் கிட்டும். விளைவுகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பும் பெறுவர்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் பெரும்பாலும் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர். இயந்திரத் தொழிலாளர்களுக்கு அவதானம தேவை.

மாணவர் கல்வித் தேர்ச்சி மகிழ்ச்சி தரும். பலதுறைக் கல்வியிலும் முன்னேற வாய்ப்பான காலம். சிறப்புச் சித்திகள், புலமைப் பரிசில்கள் கூடச் சிலருக்கு கிடைக்கும்.

பெண்களுக்கு இந்தமாதத்திலும் மனநிறைவு சம்பவங்கள் நிகழும். குடும்பப் பெண்களுக்கு வாக்குவிரோதங்கள் இடைக்கிடை ஏற்பட்டாலும் வீட்டில் பெரும்பாலும் அமைதியும் நிலவும்.

அதிஷ்டநாட்கள்: மே 16,17,21, 22பக. 30,31ப.
ஜூன் 2,3,7,8,9கா.12,13.

துரதிஷ்ட நாட்கள்: மே 23,24,25கா.28.
ஜூன் 4 ஊர 5,6



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு இம்மாதம் சூரியபகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மைதரும், கடந்தகாலங்களிலும் பார்க்க இந்தமாதத்தில் இவர்களுக்குக் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் உண்டாகும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் அதிகரிக்கும். செய்தொழிலிலும் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள் உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர். பூமி, வீடு, வாகனவசதிகள், சிறப்புக்களும் உண்டாகும். புண்ணிய யாத்திரைப் பிரயாணங்களும் சிலர் செய்வர்.

குடும்பத்தில் கணவன் மனைவி ஒத்துழைப்பும் நல்லுறவும் ஏற்படும். எதிர்பாராத திடீர்செலவுகளும் உண்டாகும். புத்திராதி உறவினர்களால் துன்பங்களும் உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். வங்கிநிதி வசதிகளும் பெறுவர். அழகுசாதனப்பொருட்கள் வியாபாரம் செய்வோர் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் பதவி உயர்ச்சி முதலானவையும் ஒருசேரக் கிடைக்கும். மனநிறைவும் பெறுவர்.

விவசாயிகட்குச் சனிபகவான் கோசாரபலம் சற்றுக் குறைந்தாலும் பயிர்விளைச்சல் திருப்திதரும். விவசாயப் பண்ணைகளிலும் லாபங்குறைந்தாலும் நட்டம்வராது.

தொழிலாளருக்குச் சாதாரணமாக வேலைவசதிகள் கிடைக்கும். ஆலைகள் இயந்திரத் தொழிற்சாலைத் தொழிலாளர் நல்லவருமானம் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளும் லாபந்தரும்.

மாணவர் கல்வியில் ஊக்கம் காட்டத்தொடங்குவர். பரீட்சை முடிவுகளும் பெரும்பாலும் திருப்திதரும். ஆனால் கலைத்துறை-கணிதத்துறை மாணவர்கள் சிறப்பாக முன்னேறலாம்.

பெண்களுக்கு இந்தமாதம் கடந்தகாலங்களிலும் பார்க்க மனச்சந்தோஷமான காரியங்கள் நிகழும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். உத்தியோகப் பெண்கட்கு பதவிச்சிறப்பு முதலியனவும் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: மே 18,19,23,24,25கா.31இ.
ஜூன் 1,2,5,6,9பக.10,14.

துரதிஷ்ட நாட்கள்: மே 25பக 26,30,31பக.
ஜூன் 7,8,9கா.



## கன்னி

உத்தரம் 2 3,4, அத்தம், சித்திரை 1,2

இவ்விராசிக்காரருக்கு இம்மாதம் சூரியபகவான் 9ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்தாலும் கேந்திராதிபனுயத் திரிகோணத்தில் சுபகோசார சஞ்சாரபலமும்பெற்ற குருபகவானுடன் சேர்க்கை பெறுவதால் நன்மை தீமை கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். இராசாங்க அதிகாரிகளால் தொல்லைகள் இடைக்கிடை ஏற்பட்டாலும் செல்வாக்குமிக்க பெரியவர்களின் உதவியால் எதனையும் சமாளித்துவிடுவார்கள். அலைச்சல் மூலம் காரியசித்தியும் பெறுவர். விற்றல் வாங்கல் மூலம் வருமானமும் வளரும். வீட்டில் அல்லது குடும்பத்தில் விவாகாதி சுபசோபன கொண்டாட்டங்கள் கூட நிகழக்கூடும்.

குடும்பவருமானம் அதிகரிக்கும். புத்திரர்வழியில் உதவியொத்தாசைகளும் கிடைக்கும். கணவன் மனைவி நல்லுறவும் வளரும். இவர்களின் வாழ்க்கைத்தரம் வளம்பெறும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சராசரியாக இருக்கும். எனினும் வங்கிநிதி இருப்புக்கள் திருப்திதரும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நன்று.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தப் பகீரதப்பிரயத்தனங்கள் செய்யவேண்டியிருக்கும். பதவியுயர்ச்சி முதலியன இடம்பெறுவதும் கடினமே.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் தொடர்ந்தாலும் நல்ல விளைச்சலும் பெறுவர். விவசாயப் பண்ணைகளிலும் கணிசமான விளைச்சல் கூடும். விளைச்சல்களைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

தொழிலாளர்களுக்கு நாளாந்த சீவனத்துக்குப் போதிய வருமானம் பெறக்கூடிய வேலைவசதிகள் பெறலாம். தொழிற்பிணக்குகள் பெரும்பாலும் நீங்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்விவளர்ச்சி ஓங்கும். சட்டத்துறை-வர்த்தகத்துறை மாணவர் சிறப்புச்சித்தியும் பெறுவர். பொதுவாகப் பரீட்சை முடிவுகளும் திருப்திதரும்.

பெண்களுக்கு இம்மாதத்தில் மனத்துக்கு விருப்பமான காரியங்களைச் சாதித்துக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கும் வீட்டில் மனநிறைவான காரியங்கள் நிகழும்,

அதிஷ்ட நாட்கள்: மே 16,17,21,22,25,26;
ஜூன் 3,4,7,8,12,13.
துரதிஷ்ட நாட்கள்: மே 27,28,31.
ஜூன் 1,2,9,10.




சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் (8ல்) அட்டமத்தில் சுவர்ணமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் சிறப்பாக அமைவதால் நன்மை தீமைகலந்த பலன்கள் நிகழும். பொதுவாக இவர்களின் தேகநலம், குடும்ப நலம் என்பன சீராக இருக்கும். தடைதாமதங்களுக்கிடையிலும் காரிய சித்தியும் பெறுவர். இனசன பந்துக்களுடன் பகைவிரோதங்கள் ஏற்பட்டாலும் அந்நியர் உதவிகள், அந்நிய தேசப் பொருள் வரவு, நீசப் பிரபுக்களின் உதவி ஒத்தாசைகள் முதலானவையும் கிடைக்கும். சிலருக்குப் பூமிலாபம், வீடுவாகன விருத்திகளுமுண்டு.

குடும்பத்தில் நல்லுறவு விருத்தியாகும். குடும்ப வருமானம் கணிசமாக அதிகரிக்கும். குடும்பசுகமும் சீராக இருக்கும். ஆனால் புத்திரர் உதவிகள் கிடைப்பது சந்தேகமே!

வர்த்தகர்களுக்குப் புதன்பலம் பெறுவதால் வியாபாரம் முன்னேற்றம் காணும். நிதி இருப்புக்களும் கூடும். வாடிக்கையாளரின் வரவும் அதிகரிக்கும். புது முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் பதவிஉயர்ச்சி முதலானவற்றிற்கு அடிகோலும். சக ஊழியருடன் பொறுமையாக இருத்தல் நல்லது.

விவசாயிகளுக்குச் சனிபகவான் கோசாரசஞ்சாரபலம் பெறுவதால் பயிர் உற்பத்தியில் முன்னேற்றம் காணும். விளைச்சலும் அதிகரிக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் பெரும்பாலும் அதிகரிக்கும். ஒப்பந்தத் தொழில்களிலும் நல்ல லாபம் பெறுவர். எண்ணெய் ஆலைத்தொழிலாளிகள் போதிய முன்னேற்றம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பலவித காரணிகளால் பெரும்பாலும் பாதிப்படைந்துகொண்டே இருக்கும். பரீட்சைப் பெறுபேறுகள் பெரும்பாலும் ஏமாற்றம் தந்தாலும் ஆச்சரியமில்லை.

பெண்களுக்கு எடுத்த முயற்சிகள் எல்லாம் அலைச்சல்—தடைதாமதத்தால் ஏமாற்றம் தரும். கணவன்மாரின் ஒத்துழைப்புக் கிடைப்பதால் குடும்பப் பெண்கள் மனஅமைதி பெறுவர்.

அதிஷ்டநாட்கள்: மே 18,19,23,24,28
ஜூன் 5,6,9பக.10,14பகல்
துரதிஷ்டநாட்கள்; மே 16,17,30,31பகல்
ஜூன் 2,3,4பக.11,12,13




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிக இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 7ல் தாம்ரமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் சுபபலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது ஆனால் வியாழ பகவானின் சுபகோசார சஞ்சாரத்துடன் திருஷ்டியும் செய்வதால் நன்மைதீமை கலந்த பலன்களே பெரும்பாலும்

நிகழவேண்டும். தேகசுகம் சீராக இருக்கும். குடும்பசுகம் அடிக்கடி பாதிப்படையும். பொருள் வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டே போகும். பெரியவர்கள், மதத் தலைவர்களின் ஆதரவும் உதவி ஒத்தாசைகளையும் பெறுவர்.

குடும்பசுகம் அடிக்கடி குறைவுறும். கணவன் மனைவியருக்கிடையில் சிறுசிறு சச்சரவுகள் கூட இடம்பெறும், குடும்பத்தில் மங்கல கொண்டாட்டங்களும் நிகழக்கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். முதலீடுகளின் வருமானமும் வீழ்ச்சியடையும். கடன் நிலுவைகளையும் அறவிடுவதும் சிரமமாக இருக்கும். முதலீடுகளைத் தவிர்த்தல்நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் கூடிக்கொண்டேபோகும். எவ்வளவு தான் முழுமனதுடன் உழைப்பினும் நற்பெயர் பெறுவதும் கடினமே!

விவசாயிகளுக்கு இயற்கை- ஏதுக்களால் பயிர்ச்சேதம் உண்டாகும். பொதுவாக விளைச்சலும் குறைவுறும். வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர் வேலையில்லாமல் துன்புறுவர். வேலைத்தலங்களில் விபத்துக்களைக்கூட இவர்கள் எதிர்கொள்ளவும் கூடும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் பெரும்பாலும் பட்டம் ஏற்படும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்குத் தடைக் காரணிகள் ஏற்படும். ஆசிரியர்-மாணவர் மத்தியிலும் கருத்து முரண்பாடுகளும் ஏற்படும். பரீட்சை முடிவுகளும் சிலசமயம் ஏமாற்றம் தரக்கூடும்.

பெண்களுக்கு மனக்குமுறல்கள் இடைக்கிடை ஏற்படக்கூடும். பலமுறை சிரமங்களுக்கிடையில் முயற்சி எடுப்பதால் விவாகமாகாதவர்களுக்கு விவாக சித்தியும் கிட்டும்.

அதிஷ்டநாட்கள்: மே 16,17,21,22ப.26,30
ஜூன் 7,8,11இர.12,13

துரதிஷ்டநாட்கள்: மே 18,19,31இரவு
ஜூன் 1,2ப.5,6,14ப.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு ராசிக்காரருக்குச் சூரியபகவான் 6ல் ரிஜஸமூர்த்தியாகப் பலத்துடன் இம்மாதம் வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களில் அனுபவித்து வந்த கஷ்டநட்டங்களிலிருந்து பெரும்பாலும் விடுபடத் தொடங்குவார்கள். தேகசுகமும் சீராக இருக்கும். குடும்பசுகத்திலும் முன்னேற்றம் ஏற்படும், பொருள் வருமானமும் வரத் தொடங்கும். இராசாங்க அனுகூலங்களும் கிடைக்கும். உத்தியோகத் துறையில் மனநிறைவும் பெறுவர், ஆனால் இராசியதிபன் ரோகத்தானத்தில் அஸ்தமனகதியில் துர்க்கோசார சஞ்சாரம் செய்வதும் சனிபகவானின் குரூரகோசார சஞ்சாரமும் செவ்வாய் 7லும் 8லும் சஞ்சாரம் செய்வதும் சுபபலன்களை அதிகம் தடைசெய்யக் காரணமாகவும் அமையும். விபத்துக்கள் அவமானம் குடும்பப்பிணக்கு முதலான கஷ்டபலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் பிணி பீடைகள் இடைக்கிடை தோன்றும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடுவதால் கடன் பழுவும் ஏறும். இனசன பந்துக்களுடன் பகை விரோதங்கள் தொடரும்.

வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். எனினும் நிதி நெருக்கடிகளும் இவர்களுக்கு இருக்கவே செய்யும். முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கட்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் நல்லெண்ணங்களும், பாராட்டுக்களும் கிடைக்கும். ஆனால் பதவி உயர்ச்சி என்பன கேள்விக்குறியாகவேயிருக்கும்.

விவசாயிகளுக்குச் சனியின் குரூரகோசாரசஞ்சாரம் விளைச்சலைப் பெரிதும் குறைக்கச் செய்யும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் தொடரும். கடனில் முதலீடு செய்வதைத் தவிர்த்தல்நல்லது.

தொழிலாளருக்குள் கருத்து மோதல்களும் வேலைநிறுத்தம் முதலியனவும் அடிக்கடி ஏற்படுவதால் வருமானம் வீழ்ச்சியுறும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் உண்டாகும். எண்ணெய் ஆலைகள் - தொழிற்சாலைகளில் வேலைசெய்வோர் திடீர்விபத்துக்குள்ளாகவும் கூடும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். மாணவர் மத்தியில் வெறுப்பும் ஏமாற்றங்களும் ஏற்படும். ஆசிரியர்கள் - மாணவர் மத்தியில் வெறுப்புணர்ச்சி வளர்வதால் பரீட்சை முடிவுகளும் ஏமாற்றம் தரும்.

பெண்களுக்கு இந்த மாதத்தில் உறவினர் துன்பம் அதிகரிக்கும். குடும்பப் பெண்களுக்குக் களத்திர பிணி, பீடை, புத்திரர் தொல்லைகள்

முதலியனவும் ஏற்படுவதால் அல்லல்படுவர். உத்தியோகப் பெண்கள் அதிகாரிகளால் மதிப்புப் பெறுவர்.

அதிஷ்ட நாட்கள்: மே 18,19,23,24,25.
ஜூன் 1,2பக.9,10,11,14.

துரதிஷ்ட நாட்கள்: மே 21,22.
ஜூன் 3,4,7,8.



## மகரம்

உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 5ல் லோகமூர்த்தியாகி வலம்வருகின்றார். சூரியசஞ்சாரம் பலம் குறைந்தாலும் வியாழபகவானின் திரிகோணபார்வை இவர்களுக்கிருப்பதால் பொதுவாக நன்மை தீமை கலந்த பலன்களே அதிகம் நிகழும். இவர்களின் உடல் நலம் சீராக இருக்கும். எந்த முயற்சிகளிலும் அலைச்சல்மூலம் காரியசித்தியும் பெறுவர். பொருள் வருமானத்திலும் செலவுகள் கூடும். புத்திரர் முதலான உறவினர்களின் உதவிகளும் கிடைக்கும். வீட்டில் விவாகாதி மங்கலகொண்டாட்டங்களும் இடம்பெறக்கூடும்.

குடும்பசுகம் சீராகவிருக்கும். குடும்பத்தில் நல்லுறவு ஏற்படும். பொதுவாக வீட்டில் மனநிறைவும் அமைதியும் உண்டாகும். ஆனால் வருமானத்திலும் செலவுகள் கூடுவதால் கடன்பயமுமுண்டாகும்.

வர்த்தகர்கட்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முதலீடுகளின் வருமானம்குறைவுறும். ஆனால் வங்கிநிதி இருப்புக்கள் திருப்திகரமாக இருக்கும். சில்லறை வியாபாரத்திலும் மொத்த வியாபாரிகள் கூடிய வருமானம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கும் மேலதிகாரிகளுக்குமிடையில் அடிக்கடி கருத்து மோதல்கள் இடம்பெறும். சிலர் பதவிகளை உதறித் தள்ளிச் சென்றாலும் ஆச்சரியமில்லை, உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் தொடரும். உற்பத்திச் செலவும் கூடும். கூடியவரை கடனில் முதலீடுசெய்வதைத் தவிர்ப்பதால் பெருநட்டம் வராது. சந்தைவாய்ப்புக் கிடைப்பதும் கடினம்.

தொழிலாளருக்குச் சனியின் குரூரகோசாரம் தொடர்வதால் நாளாந்த வருமானம் வீழ்ச்சியடையும். எங்கும் அலைச்சலும் ஏமாற்றமும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படுதலால் இவர்கள் பெரும் அல்லற்பட நேரும்.

மாணவரின் கல்வியூக்கம் ஆக்கம் தரும். பரீட்சை முடிவுகளும் சாதகமாக இருக்கும். சட்டத்துறை மாணவர் சிறப்புச்சித்திகள் - புலமைப் பரிசில்கள் கூடப் பெறுவர்.

பெண்களுக்குப் பெரியவர்களின் ஆசியும் உதவிகளும் கிடைக்கும். விவாகமாகாத பெண்கள் விவாகமுயற்சிகளில் வெற்றியும் பெறுவர். குடும்பப் பெண்களுக்கு வீட்டில் நிகழும் மங்கலநிகழ்ச்சிகளால் மனஅமைதியும் பெறுவர்.

அதிஷ்ட நாட்கள்: மே 16,17,21,22ப.25,26,30.
ஜூன் 2,3,4,12,13.

துரதிஷ்ட நாட்கள்: மே 22இர.23,24.
ஜூன் 5,6,9,10,11.



## கும்பம்

அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 4ல் தாம்ர மூர்த்தியாகப் சஞ்சாரம் செய்கின்றார். இவர் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பொதுவாக இவர்களின் தேகசுகம் இடைக்கிடை பாதிப்படையும். இராசி அதிபன் சனிபகவான் லாபத்தில் இருந்து திருஷ்டி செய்வதால் அந்நிய பிரபுக்களின் உதவிகள், அந்நியநாட்டுப் பொருள்வரவு குறிப்பாக மேற்கு தென்மேற்குத் திக்குகளில் அனுகூலமும் பெறுவர். புதன் யோகவலிமை பெறுவதால் விற்றல் வாங்கல் மூலம் லாபம்-வீட்டுச்சிறப்பு-வாகன வசதிகளும் சிலருக்குக் கிடைக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு உண்டாகும். புத்திரர் உதவி ஒத்தாசைகள் தாமதமாகக் கிடைக்கும். அந்நியர் அல்லது அயலவர்களின் சரீர உதவிகள் பொருளுதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புடன் முன்னேறிவரும். முதலீடுகளில் வருமானமும் அதி

கரிக்கும். தானியவகை-எண்ணெய்-எரிவாயுவகை வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். சக ஊழியர்க ளின் உதவிகள் கிடைப்பதால் எவ்வித நிலைமை களையும் சமாளித்து விடுவார்கள்.

விவசாயிகளுக்குச் சனிபகவான் சாதகமாகச் சஞ்சாரம் செய்வதால் விளைச்சல் கூடும். நல்ல சந்தை வாய்ப்பும் பெறுவர். இவர்களின் வாழ்க் கைத் தரமும் உயரும்.


தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும் தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையும் ஏற்படும். ஒப்பந்தத் தொழில்களிலும் நல்ல லாபம் பெறு வர். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

மாணவர் கல்வியில ஊக்கம் காட்டுவர். மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் சிறப் பாகச் சித்தியடைவர். கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்பாகச் சித்தியடைவர்,

பெண்களுக்கு வசதிகளைப் பெரும்பாலும் பெற்றுக்கொள்ளச் சாதகமான காலம். ஆனால் விவாகமாகாதவர்களுக்கு விவாக சித்தி ஏற்படு வது கடினம்.

அதிஷ்டநாட்கள்: மே 18,19,22இர.23,24,28.
ஜூன் 1,2பக.5,6,14பக.

துரதிஷ்டநாட்கள்: மே 16,17,25பக.26
ஜூன் 7,8,11இர.12,13



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரிய பகவான் 3ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்து டன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். ஆனால் இராசி அதிபன் வியாழபகவான் குரூர கோசார சஞ்சாரம் செய்வதும் இங்கு கவனிக்கப்படவேண் டும். எனவே இவர்களுக்கு நன்மை தீமைகலந்த சம பலன்களே நிகழும். இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். பொருள் வருமானத்திலும் முன் னேற்றம் பெறுவர். ஆயினும் அசீரணம் முத லான வயிற்று வியாதிகள், சத்திரசிகிச்சைப் பயம், எதிர்பாராத திடீர் நெருக்கடிகள், வாக்கு விரோதங்கள்-அலைச்சல்-பொருள் நட்டம் முதலி யனவும் சிலருக்கு இடம்பெறக்கூடும்.

குடும்பத்தில் வருமானம் கணிசமாக அதிகரிக் கும். கணவன் மனைவியரின் பிணக்குகள் பெரும் பாலும் குறைவுறும். இன சன பந்துக்களுடன் பகைவிரோதங்களும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற் படும். நிதிவசதிகளும் குறைவுறும். வாடிக்கை யாளரின் வரவும் குறையும். கறுப்புச்சந்தை வியா பாரம் ஆபத்துக்களையும் வரவழைத்துவிடும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் பெறுவது சிறப்பாகும். பதவியுயர்ச்சி முதலியன வும் சிலருக்குக் கிடைக்கும். உடன் ஊழியர்களு டன் பொறுமையாக இருப்பதால் நன்மைபெறுவர்

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்திச் செலவுகள் கூடினாலும் விளைச்சல் கணிசமாகக் கூடுவதால் நட்டம்வர இடமில்லை. விவசாயப் பண்ணைகளி லும் லாபம் பெறுவர்.

தொழிலாளர்களுடைய பிணக்குகள் பெரும் பாலும் நீங்கும். தொழிற்சங்க வாதிகளால் இவர் களின் வாழ்க்கைவளமும் கூடும். சிலருக்குத் தொழில் சம்பந்தப்பட்ட விபத்துக்களும் ஏற்பட வும் கூடும்.

மாணவர் கல்வி வளர்ச்சி தொடரும். ஆயி னும் மாணவர் - ஆசிரியர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகளும் இடைக்கிடை தோன்றும், பொது வாகப் பரீட்சை முடிகள் திருப்திதரும்.

பெண்கள் தமது மன விருப்புக்களைப் பெரும் பாலும் இந்த மாதத்தில் சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் விவாகமாகாதவர்களின் விவாக முயற்சிகள் இழுபறி நிலையிலேயே இருக்கும் குடும் பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அர வணைப்பும் கிடைப்பதால் வீட்டில் மனநிறைவு ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: மே 21,22ப.26,30,31ப.
ஜூன் 2,3,4பக.,7,8,9கா.

துரதிஷ்ட நாட்கள்: மே 15மு.ப..18,19,28.
ஜூன் 9பக.10,14பக,

கணித சுத்தமும், நுட்பமும்
உடையது
**திருக்கணித பஞ்சாங்கம்**
மட்டுமே.

# எரிந்த வீடுகள்

சி. இரத்தினவடிவேல்
அளவெட்டி

எதிர்காலத்தில் நிகழவிருப்பவை பற்றி முன்கூட்டியே எடுத்துரைக்கும் ஒப்பற்ற கலையே சோதிடமாகும். இது பரந்ததொரு விஸ்தாரமான விஞ்ஞானமாகும். பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையிலும் இன்று சோதிடக்கலை அதிகம் விருத்திஎய்திவிட்டது. சோதிடத்துடன் பல சோடனைகள் சேர்ந்துவிட்டபடியாலும் மணிகளுடன் பதர்கள் கலந்துவிட்டபடியாலும், பதர்களைக் களைந்து மணிகளை எடுப்பதற்காக ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. உலகத்து விஞ்ஞானிகளும் சோதிடம் விஞ்ஞானத்தின் ஒரு பகுதி என்று ஒப்புக்கொண்டுள்ளனர். சர்வகலாசாலைகளும் சோதிடத்திற்குச் சிறந்த இடம் கொடுத்து வருகின்றன. சோதிடத்தில் நம்பிக்கையில்லாதோரும் "கேட்டுப் பார்ப்போம்" என்னும் அளவிற்கு நம்பிக்கையுடையராய் விட்டனர். மேல்நாடுகளில் சோதிடப் பத்திரிகைகள் பார்த்த இடமெல்லாம் காணக்கூடியவாறுள்ளன. சோதிடத்தை மறுக்கமுன் அதனை நன்கு கற்க வேண்டும் என்ற அடிப்படையில் சோதிடக்கல்வியில் ஈடுபட்டவர்கள் சோதிடத்தை மறுக்கமுடியாமல் மானசீகமாக ஏற்றுள்ளனர்.

அனேக இந்து விஞ்ஞானங்களைப் போலவே சோதிடவியலும் சின்னபின்னப்பட்டு சிதறி மறைந்திருக்கின்றதேயன்றி மங்கி மறைந்துவிடவில்லை. சோதிட விற்பன்னர்கள் ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டு இவ்வரிய பொக்கிஷங்களை ஆழமாக ஆராயுமிடத்து மறைந்திருக்கும் இவ்வொப்பற்ற கலை மீண்டும் புத்துயிர் பெறமுடியும். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலே இக்கலையானது பகிரங்கமாகப் பார்வைக்கு விடப்படுதல் அவசியமாகும். தற்போது ஓரளவு புத்துயிர் பெற்றுவரும் இக்கலையானது நமது இந்த ஞானபூமியிலே வாழ்ந்து மறைந்துவிட்ட மகரிஷிகளினல் அருளப்பட்டவையேயன்றி புதிய வெளிக்கொணர்வுகள் அல்ல என்பதற்குப் போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றின் ஆழமான கண்ணேட்டத்திலேயே "தக்த இராசிகள் அல்லது எரிந்த வீடுகள்" என்ற ஆய்வுக்கட்டுரை தரப்படுகிறது. "New Technique of Prediction" "பலன் சொல்வதற்கு நவீன முறைகள்" என்பதன் வாயிலாக, சேஷாத்திரி ஐயரவர்கள் (ஆற்றிய பெரும் ஆராய்ச்சியின் விளைவாக) மூலம் சோதிடத்தில் இதுகாறும் பெறப்படாத புதைந்து கிடந்த நுட்பங்கள், உண்மைகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

தீய்ந்த இராசி, Zero இராசி எனக்குறிப்பிடப்படுபவையும் இந்த தக்த இராசிகளை அல்லது எரிந்த வீடுகளையே ஆகும்.

இரவுவேளைகளில் நாம் ஆகாயத்தைப் பார்க்கும் பொழுது சிலவேளைகளில நட்சத்திரங்களைப் போன்ற சில பொருட்கள் ஒருதிசையிலிருந்து இன்னொரு திசைக்கோ மேலிருந்து கீழோ விரைவாக ஓடி மறைவது போலக் காட்சியளிப்பதைப் பார்த்திருக்கிறோம். இவையே விண் கற்களாகும். (Meteons) சூரியனைச் சுற்றி விண்ணில் ஏறக்குறைய செக்கனுக்கு 26 மைல்கள் வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் விண் கற்களில் சில பூமியின் பவனமண்டலத்தில் பிரவேசித்து விடும்பொழுது காற்றுடன் உராய்வதனுல் இவை மிகவும் சூடாகி நெருப்புப் பிடிக்கின்றன. நெருப்புப் பிடித்து ஓடிக்கொண்டிருக்கும்போதே நமக்கு காட்சியளிக்கின்றன. இவற்றுட் பெரும்பான்மையானவை முழுவதும் எரிந்து விடுகின்றன. ஆனுல் பிரமாண்டமான விண்கற்கள் முழுவதும் எரிந்துவிடாது பூமியில் வந்து விழுகின்றன. இவை விழுந்தாலும் அதிஷ்டவசமாக மனித சஞ்சாரமில்லாத பகுதிகளிலேயே விழுந்திருக்கின்றன. 1908 ஜூன் 30-ந் திகதி சைபீரியாக் காட்டில் விண்கல் விழுந்து ஏறக்குறைய 3500 சதுரமைல் அழிக்கப்பட்டது கருத்திற் கொள்ளத்தக்க அம்சமாகும். இவ்விண்கற்களின் வீழ்ச்சியை திதிகள் நிர்ணயிக்க வேண்டும். அதாவது திதியைப் பொறுத்து இராசிகள் வீடுகள் வலிமை குன்றுகின்றன. இவ்வலிமை குன்றும் இராசிகளே எரிந்த வீடுகளாகும்.

அமாந்தத்தில் சூரியனேடு தக்ஷிணேத்தர ரேகையிற் சமமாக நிறை சந்திரன் சூரியனைப் பிரிந்து

(21-ம் பக்கம் பார்க்க)

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

## தொடர் 15

பெயரமைப்பது, பெயர் மாற்றுவது என்பனவற்றை உதாரணங்களோடு சென்றமுறை விளக்கினேன். அவைபற்றி மேலும் சில விளக்க நுட்பங்களையும் உதாரணங்களையும் இன்று பார்ப்போம்.

1, 3, 5, 6,9 ஆகிய சுப எண்களில் பெயர் வைக்கலாம் என்று கூறினேன். ஆனால் இவற்றை கூட்டு ஒற்றை எண்ணாகக் கொண்ட சில எண்களை நாம் தவிர்க்கவேண்டும். உதாரணமாக 28 எண் கூட்டு ஒற்றை எண் 1 ஆகவரின் இது பெயரெண்ணாக வந்தால், மிகத்தாமதமான முன்னேற்றத்தையும், பிற்காலத்தில் பல சிக்கல்களையும் ஏற்படுத்தும். 39-ம் எண் கூட்டு ஒற்றை எண்ணாக 3ஐ கொண்டிருந்தாலும், இவ்வெண்ணும் பிரச்சனைக்குரிய ஒன்றாகும். 39ஐ பெயரெண்ணாகவுடையோர் எந்நேரமும் குழம்பிக்கொண்டும் மந்தப் போக்கிலும் செயற்படுவர். கடும் உழைப்பிற்குப் பின்பே நற்பலன்களைப் பெறுவர். அதேபோல 48ம் எண்ணும் 3ஐ கூட்டொற்றை எண்ணாகக் கொண்டாலும், பலத்த போராட்டம் விதியின் கைப்பொம்மையாக இருப்பர். அதுபோலவே 84, 102 ஆகிய எண்களையும் பெயரெண்ணாக அமைப்பதில் இருந்து தவிர்க்கவேண்டும். அடுத்து 5 எண்ணை கூட்டு ஒற்றை எண்ணாகக்கொண்ட எண்களினால் 32, 50, 86, 104ம் தவிர்க்கப்படவேண்டிய எண்களாகும். ஆனால் எண் 32, 41ல் பெயரை மாற்றுபவர்கள் தெய்வ பக்தி உள்ளவர்களாகவும், நீதி நெறிமிக்க தர்மவான்களாகவும் இருந்தால் இவ் எண்களால் ஏற்படும் திடீர் மாற்றங்கள் வீழ்ச்சிகள் பொருள் அழிவுகளிலிருந்து தப்பிவிடுவார்கள். இந்த எண்கள் ஒருவரை அதிஷ்டகரமானவாழ்விற்கும் கூட இட்டுச்செல்லக்கூடியது.

இதைப்போலவே கூட்டு ஒற்றை எண்ணாக 9ஐக் கொடுக்கும் எண்களான 18, 63, 99 ஆகியன பெயரெண்ணாக அமைவதைத் தடுக்க வேண்டும். 18 பெயரெண்ணாக அமைந்தால் கடின இதயம் கொண்ட சண்டைக்காரராக இருப்பதோடு ஆபத்துக்கள் சூழ்ந்த நிலையில் வாழ்வர். 63 எண் பெயரெண்ணாக அமைந்தால் திருட்டு கொள்ளை, கொலை போன்ற குற்றநடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சிறைசெல்லவும் கூடும். 99 பெயரெண்ணாக அமைந்தால் விரோதங்களும் கஷ்டங்கள் கரைச்சல்களையும் ஏற்ற இறக்க வாழ்வும் அமையும். 36 எண்ணும் அவ்வளவு விரும்பத்தக்க எண் அல்ல: 36ல் பெயரமைந்தால் குடும்ப வாழ்வ பெரிதும் பாதிக்கப்படும். இவ்வாறு பருமட்டாக 1, 3, 5, 6, 9 ஆகிய எண்கள் சுப எண்கள் என்று கூறப்பட்டாலும், குறிப்பிட்ட சில எண்கள் சுபப்பலன்களைவிட அசுபப்பலன்களையே அதிகம் கொடுப்பதால் அவற்றை இனம்கண்டு நாம் விலக்கிக்கொள்ள வேண்டும்.

பெயர் மாற்றும்போது, இன்னும் குறிப்புக்களையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். 2ம் எண் போன்ற எண்களில் பெயரமைந்து அல்லது வேறு வழிகளில் உடற்சக்தி குறைந்தவர்கட்கு 5, 9 ஆகிய எண்களில் பெயரை மாற்றுவது விரும்பத்தக்கதல்ல. 41, 50 ஆகிய 5 எண்களில் பெயரை மாற்றினால் உடல் அதிக வேகமாக இயங்க ஆரம்பித்து அதற்கேற்ற உடற்சக்தி இல்லாவிட்டால் நோய்களை உண்டாக்கிவிடும். கூட்டொற்றை எண்கள் 2, 5, 7 ஆகியவை மிகவும் மனோவேகம் கூடிய எண்களாகும். இவற்றில் பெயரமைந்தோர் மனோசக்தியோடு தொழிற்படுவதால் உடலுழைப்பிற்கு இலாயக்கற்றவராவர். 9 எண் உடற்சக்தியோடு சிலசமயம் மனோசக்தியையும் கொடுக்கும்.

பொதுவாக பிறந்ததேதியை அனுசரித்துப் பெயரை மாற்றும்போது சரீரப் பாதிப்பை உணர முடியும். உடற் தொழிற்பாட்டில் வேறுபாடுதோன்றும்; கூட்டெண்ணை அனுசரித்துப் பெயரைமாற்றினால் மனோவேகம் பாதிப்படையும்; சிந்திக்கும்

சக்தி அல்லது தன்மையில் வித்தியாசத்தை உணரலாம். சுகமாக அல்லது சூழ்நிலை காரணமாக தலைமைத்துவம், அதிகாரம், பதவி, பிரபல்ஜம் கிடைக்கக்கூடியவர்கள் எண் 1ல் பெயரை மாற்றிக்கொள்ளலாம். வியாபாரம் வெளியீட்டுத்துறை மற்றும் பொதுசனத் தொடர்பான தொழில் செய்வோர் 5 எண்ணில் பெயரை மாற்றிக்கொள்ளலாம். ஆனால் மனத்திற்கு அல்லது மூளைக்கு அதிகவேலை காத்திருக்கும். கலைகள் மற்றும் பகட்டான, நுகர்வுப் பகுதியில் ஈடுபட்டோர் 6 எண்ணில் தமது பெயரை அமைத்துக்கொள்ளலாம். பாதுகாப்புப்படைகள் மற்றும் கடின உழைப்பில் ஈடுபடுவோர் தமது பெயரை 9 எண்ணில் அமைக்கலாம். கணவன் மனைவிக்கு ஒருவருக்கு 3லும் மற்றவருக்கு 6லும் பெயரெண் அமையக்கூடாது. மேலும் இவர்கள் 9-ம் எண் வீட்டிலேயே குடியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் குடும்பத்திலடிக்கடி பூகம்பம் உருவாகும். அவ்வாறே ஒருவருக்கு எண் 2லும் மற்றவருக்கு எண் 9லும் எண்கள் அமையக்கூடாது. அப்படி அமைந்தால் குடும்பத்தில் நித்தம் வாக்குவாதம் நோய்நொடிகள் தொடர்ந்தபடி இருக்கும். மேலும் இவர்கள் 4, 8 எண்கள் வீட்டில் குடியிருத்தலாகாது. மேலும் 4-ம் எண்ணினரும் பெயரமைக்கும் போதோ அல்லது பெயரை மாற்றும் போதோ பெரிய ஆழமான ஆராய்ச்சிக்குப் பின்னரே தமது பெயரை கட்டாயமாக வேறொரு சுப எண்ணில் மாற்றிக்கொள்ள வேண்டும். (வளரும்)

---

## மிதுன இலக்கினத்தின் சில விசேட அம்சங்கள்

உதயலக்கினம் மிதுனமாகி, இலக்கினாதிபதி 4ல் இருக்க 5ல் சுக்கிரன் இருக்க, 6ல் சூரியன் செவ்வாய் சேர்ந்திருக்க, வியாழன் சந்திரன் 10ல் இருக்க, சனி கும்பத்திலிருக்க பிறந்த ஜாதகருக்கு நல்ல அதிஷ்ட வாய்ப்புகள் உண்டாகும். அரசாங்கத்தால் பாராட்டப்படுவர். கலைத்துறையில் பாண்டித்தியம் பெற்றிருப்பர். எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் திறமையுண்டு. பொருளாதார விருத்தி ஏற்படும். பிறநாடுகளுக்குச் சென்று பொருளீட்டும் வாய்ப்பும், புலமைப் பரிசில்களும் கிட்டும்.

மிதுனம் ஜன்மலக்கினமாகி லக்கினாதிபதி புதன் குருவுடன் 2ல் இருக்க, சூரியன் சிங்கத்தில் ஆட்சிபெற, சுக்கிரன் லக்கினத்திலிருக்க, சந்திரன் சனியுடன் துலாத்தில் இருக்க, 11-ம் வீட்டில் செவ்வாய் இருக்க பிறந்த ஜாதகர் எந்த விஷயத்தையும் புரிந்துகொள்ளக்கூடிய அறிவாற்றல் உடையவராவர். கலைத்துறையில் விற்பன்னராக இருப்பர். அரசாங்க கௌரவமும், அனுகூலமும் கிட்டும்.

மிதுனம் உதயலக்கினமாகி புதன் லக்கினத்தில் சுக்கிரனுடன் இருக்க, சூரியனும் குருவும் 2ல் இருக்க, செவ்வாய் சனியுடன் மகரத்திலிருக்க சந்திரன் மீனத்திலிருக்க பிறந்தவர் கலைஞானங்கைவரப்பெற்றுப் பிரசித்திபெறுவர். பேச்சுவன்மையுடையவராவர். சுதந்திர புருஷராக விளங்குவர். எல்லா விஷயத்திலும் முன்னேறிச் செல்வர். கல்லூரியில் பேராசிரியராக விளங்கக்கூடிய தகுதி ஏற்படும்.

சைவ விரதங்களும் ..... (22-ம் பக்கத் தொடர்)

இவ்வழக்கத்தையும் அவர்கள்வாயில் ஒலிக்கும் நாட்டுப் பாடல்களையும் அவதானித்த மணிவாசகப் பெருந்தகையார் திருவெம்பாவையை அருளிச் செய்தார். திருவெம்பாவை விரதநாட்கள் பத்திலும் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி தவிர ஏனைய திருமுறைகளை ஓதாது காப்பிட்டுவைக்கும் மரபு நம்நாட்டில் நீண்டகாலமாக இருந்து வருகிறது. திருவெம்பாவையின் சிறப்பைக் காட்டுகிறது இது:

"நெய்யுண்ணோம், பால் உண்ணோம் நாட்காலே நீராடி கண்ணுக்கு மையிட்டு எழுதோம் மலர் இட்டுக் கூந்தல் முடியோம்" என்று இந்த விரத நியமங்களை உரைக்கிறது திருப்பாவை. பத்து நாட்களும் தம்மைத் தமக்காக அலங்கரிக்காமலும் பால், நெய் சேர்க்காத உணவு உண்டும் (ஒருநேர உணவு) இறைவழிபாடு செய்து நல்ல மழையையும், நல்ல கணவரையும் வேண்டிப் பெண்கள் நோற்கும் நோன்பு இது. பத்தாம் நாள் உபவாசமிருந்து பதினோராம் நாள் காலை பாரணை செய்யலாம்.

முக்கிய குறிப்பு:-

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்துவேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

# கையெழுத்து காட்டும் பலன்

— கா. சின்னையா, சங்குவாரி, கம்பளை. —

ஒருவர் எழுதும் எழுத்துக்கள் நேராய், நிதானமாயும், நிறுத்தியும், ஒரு எழுத்துக்கு ஒரு எழுத்து சேராமலும் இருந்தால் அப்படிப்பட்டவர் சுயநலக் காரராயும், கர்வியாயும் எதையும் யோசிக்காமல் செய்துவிட்டுப் பிறகு வருந்துபவ ராயுமிருப்பர்.

ஒருவர் எழுதிய எழுத்துக்கள் இடது பக்கம் சாய்ந்தது போல் காணப்பட்டால் மனதில் எந்த விதமான விகல்பமும் இல்லாதவராயும் ரகசியங்களைக் காப்பாற்ற முடியாதவராயும் சமயம் போல் நடந்து எந்தக் காரியத்தையும் சுலபமாக சாதித்துக் கொள்பவராயும், முன்கோப முள்ளவராயும், தனம் சேர்ப்பதில் அதிக ஆசை இல்லாதவராயும் இருப்பார்.

எழுத்துக்களை நீட்டிநீட்டி வேகமாக எழுது கிறவர்கள் எந்தக் காரியத்திலும் துணிச்சலைக் காட்டுபவராயுமிருப்பர்.

எழுதும் எழுத்துக்கள் வலதுபக்கம் சாய்ந்த மாதிரிக் காணப்பட்டால் பிறரிடம் கட்டுப்படா தவராயும், தன் வார்த்தைக்கு மதிப்பு உள்ளவ ராயும், மனக்கோட்டை கட்டுபவராயும் எதிலும் நம்பிக்கை உள்ளவராயும், அதிக செலவாளியா யும், நட்புறவுள்ள, பிரியமுள்ளவராயுமிருப்பர்.

வார்த்தைகளுக்கிடையே நிறைய இடம் விட்டு எழுத்துக்களைத் தனித்தனியே பிரித்து எழுதுகிறவர்கள் சமூகத்தில் ஒட்டி உறவாடா மல் தனித்திருப்பவர்கள் என்றும், சங்கிலித் தொடர்போல் கூட்டெழுத்து எழுதுகிறவர்கள், எதிலும் தைரியமும் தன்னம்பிக்கையும் உடைய வர்கள் எனக் கூறப்படுகிறது.

பேனாவின் வீச்சோடு எழுத்துக்களைச் சுழித்து எழுதுபவர்கள் வீண்பெருமையும், அகங்காரமும் உடையவர்களும், எழுத்துக்களையும் வரிகளையும் நெருக்கி குறுக்கி எழுதுகிறவர்கள், குறுகிய மனப்பான்மையையும்; எழுதும்போது அடிக்கடி வெட்டியும், அழித்தும், திருத்தியும் எழுதுகிற வர்கள் குழப்பமான மனப்போக்குடையவர் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

ஒருவர் எழுதும் எழுத்துக்கள் ஒரு எழுத்து நேராயும், ஒரு எழுத்து கோணவாயும் காணப் பட்டால் அப்படிப்பட்டவர் ஸ்திரமனது இல் லாதவராயும், சொன்னபடி நடக்க சக்தி அற்ற வராயும், எளிதில் பிறரை நம்பி கஷ்டமடைத லும் கோணல் மாணல் கையெழுத்து கோணர் பேர்வழியாயும் இருப்பர் என்று சொல்லலாம்.

உருண்டையாக எழுதுபவர் இரக்கசுபாவம், கூர்மையான எழுத்து சகிப்புத் தன்மையையும் பெரிய எழுத்துக்கள் அதிகாரப் பிரியமும், சிறிய எழுத்துக்களாக எழுதுகிறவர்கள் எந்த வேலையை யும் திட்டவட்டமாக ஒழுங்காகச் செய்பவர்க ளாயிருப்பார்கள் என்பதாம்.

இரேகை சாத்திரப்படி சிறிய கைகளை உடையவர்கள் திட்டங்களை வகுத்து சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களில் செயல்பட்டு வெற்றி காண்பவர்கள் - அதேபோல் சிறிய எழுத்துக்களை எழுதி பெரிய காரியங்களை தைரியமாகச் சாதிப் பவர்கள் (Even the writing of small hands is often remarked to be large and bold) எனக் கூறுகிறார் இரேகை நிபுணர் சீரியோ.

எண் சாத்திரத்தில் (3) என்ற எண்ணை சிறப் பெண்ணாகக் கருதப்படுகிறது. அதேபோன்று மூன்று விரல்களும் மிக விசேடமானவை. எழுத் தாளனுக்கு - ஜோதிடம் கணிப்பவருக்கும் பேனாவை இறுக்கிப் பிடிக்கும் மூன்று விரல்களின் (பெருவிரல், குருவிரல், சனிவிரல்) ஊடாக உணர்வுகள் வெளிக் கொணரப்படுகின்றன என லாம். மன உணர்வுகளைக் கைவிரல்கள் வழியாக கொண்டு வந்து அதற்கேற்ப எழுத்துக்களும் அமைவதற்கு இம்மூன்று முக்கிய விரல்கள்தான் துணைபுரிகின்றன எனலாம். படைத்தல், காத் தல், அழித்தல் என்ற தத்துவப்படி முதல் இரு விரல்களும் ஆக்கல், காத்தல் என்பதும் மூன்றா வது சனிவிரல் அழித்தலாகும் எனக் கூறலாம்.

எனவே மூன்று விரல்களின் தத்துவமும், மூன்று எண்ணைச் சிறப்பெண்ணாகக் கருதி சாஸ்திர ரீதியிலும் மூன்று விரல்களைக் கொண்டு எழுதும் விதவிதமான எழுத்துக்களும் மேலே கூறிய வண்ணம் அமைவதாகின்றன.

எழுதுவதிலும் இரண்டுவிதம். அதாவது அமைதியாய் ஒவ்வொரு எழுத்தாய் எழுத எழுத்துக்களுக்குப் பின்னே எழுத்து வடிவமாக யோசனையும் தொடர்ந்துவர, முடிவு பெறும் வியாசம் ஒரு தினுசு.

மஹா வேகத்துடன் எழுத மனமும் உடனுக்குடன் விஷயங்களைத் தந்து கொண்டே செல்ல, எழுதுவதற்கு முன்னே, மனோ வேகம் ஓட, அதற்கு முன்தான் ஓடப்பார்க்க இவ்வாறு விரைவினில் எழுதி முடிவுபெறும் வியாசம் மற்றொரு வகை. இவ்விரண்டில் எது உயர்ந்தது என்றும், எது தாழ்ந்தது என்றும் ஒரு முடிவாகச் சொல்லி விடுவதற்கில்லை. அப்படி அதனை அமைய வைப்பது விநாயக மூர்த்தியின் அருள் என்றே கருதவேண்டியதாய் இருக்கின்றது. அதாவது பெருவிரல் விநாயக மூர்த்தியின் அம்சமாக இருதய கமலத்துடன் தொடர்பு பெற்று, உலகக் குருவான குருவிரல், இடையிடையே மூன்றாவது சனிவிரல் தடங்கல் பண்ணிக்கொண்டிருக்க, குருவிரல் அவரைத் தன்வசமாக்கி அடுத்தடுத்து உதிக்கும் சிறந்த கருத்துக்களை எழுதிக் கொண்டுசெல்ல காரணமாகிறார் எனலாம்.

ஒருவருடைய கையெழுத்து அவருடைய மனப்போக்கையும் குணத்தையும் காட்டுவதாக அமைகிறது என்று கையெழுத்துப் பரிசோதக நிபுணர்கள் கூறுகிறார்கள். பத்தாயிரம் பேர் ஒரேமாதிரியாகப் பேனாவைப் பிடிக்கலாம் ஆனால் ஒருவர் எழுதுவதுபோல் இன்னொருவர் எழுதுவதில்லை.

எப்படி உலகில் ஆண்டவனால் ஒவ்வொருவரின் கைகளில் இரேகைக் கோடுகளாக வரையப் பட்டிருப்பதும், அதேமாதிரி பிறிதொரு நபருக்கு இருக்காததோ, அதேபோல் ஒவ்வொருவரின் கையெழுத்துக்களும் வித்தியாசப்படும் என்பது நிதர்சனம்.

அக்காலத்தில் பாடசாலைகளில் குருமார்கள் பிள்ளைகளின் கையெழுத்திற்கே அதி முக்கியத்துவம், கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனால் தற்போது பள்ளிக் கூடங்கள் அனைத்திலும் கையெழுத்தைத் திருத்த வளர்க்க முயற்சி இருப்பதாகத் தென்படவில்லை என்பது மிகவும் கவலைக்குரியது.

கொம்பு சுழி கோணாமல்
கொண்ட பந்தி மாறாமல்
அம்புபோற் கால்கள் அசையாமல்
எழுதினாற் சோறுண்டாம்; இல்லையே யானாற்
பழுதுண்டு உன்பணிக்கே பார்.

என்பது ஆன்றோர் வாக்கு.

---

எரிந்த வீடுகள்...... (17-ம் பக்கத் தொடர்)

கிழக்குநோக்கிப் பூமியைச் சுற்றிவந்து திரும்பவும் சூரியனைச் சந்திக்கிறவரையில் பன்னிரண்டு பாகைக்கொன்றாகக்கொள்ளும் கால அளவையே பூர்வபக்கப் பிரதமை முதல் அமாவாசை ஈறாகவுள்ள முப்பது திதிகளாம். அதாவது சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வரும் ஸ்புடம் திதியின் ஸ்புடம் ஆகும். இதனையே ''திதிமானம்'' என்பர்.

தக்த இராசிகள் அல்லது எரிந்த வீடுகள் எவை எனில் இன்ன திதிக்கு இன்ன இராசிகள் எரிந்தவை என்ற வரையறை உண்டு. அமாவாசையிலும் பௌர்ணமியிலும் பிறப்பவர்களுக்கு இராசி எதுவும் எரிவதில்லை.

| | திதி | | எரிந்த இராசிகள் |
|---|---|---|---|
| பூர்வபக்க | பிரதமை | 12 | துலாம், மகரம் |
| | துவிதியை | 24 | தனுசு, மீனம் |
| | திரிதியை | 36 | சிங்கம், மகரம் |
| | சதுர்த்தி | 48 | இடபம், கும்பம் |
| | பஞ்சமி | 60 | மிதுனம், கன்னி |
| | ஷஷ்டி | 72 | மேடம், சிங்கம் |
| | ஸப்தமி | 84 | கர்க்கடகம், தனுசு |
| | அஷ்டமி | 96 | மிதுனம், கன்னி |
| | நவமி | 108 | சிங்கம், விருச்சிகம் |
| | தசமி | 120 | சிங்கம், விருச்சிகம் |
| | ஏகாதசி | 132 | தனுசு, மீனம் |
| | துவாதசி | 144 | துலாம், மகரம் |
| | திரயோதசி | 156 | இடபம், சிங்கம் |
| | சதுர்த்தசி | 168 | மிதுனம், கன்னி |
| | | | தனுசு, மீனம் |
| | பூர்ணிமை | 180 | |
| | அமாவாசை | 360 | |

ஜெனன சாதகத்தின்படி பூர்ணிமை அமாவாசை தவிர்ந்த ஏனைய திதிக்கேற்ப எரிந்த இராசிகள் அமையும். இவ்வெரிந்த இராசிகளும் அவ்வீட்டு அதிபதிகளும் அவ்வீட்டிலுறையும் கிரகங்களும் வலிமை குன்றும் என்பது பொது இலக்கணம்.

(வளரும்)

# சிவ விரதங்கள்

(முன் தொடர்ச்சி)

'கோப்பாய் – சிவம்'

## பக்தேஸ்வர விரதம்

சிவ விரதங்களுள் ஒன்றுன இந்த பக்தேஸ்வர விரதம் பார்வதி தேவிக்குப் பரமேஸ்வரனுல் சொல்லப்பட்டது. இது மலட்டுத்தனம் முதலிய தோஷங்களை நீக்கிப் புத்திர சம்பத்தும் ஆயுள், ஆரோக்கியம் முதலியனவும் கொடுக்கும். பெண்களுக்குரியது இவ்விரதம். கார்த்திகைமாத பௌர்ணமியன்று ஆரம்பித்து பௌர்ணமி தோறும் அநுஷ்டிக்கப்படவேண்டியது.

மாலை நேரத்தில் சந்தனத்தினுல் சிவனையும் மஞ்சள் மாவினுல் பார்வதிதேவியையும், மண்ணினுல் நந்தியையும் செய்துவைத்து சங்கல்ப பூர்வமாக ஆவாஹனம் செய்து சகலோபசார பூஜைகளைச் செய்யவேண்டும். (சந்தனம், மஞ்சள்மா, மண் என்பவற்றுல் உருவங்களாகச் செய்வதல்ல. சாணத்தில் பிள்ளையார் பிடிப்பதுபோலச் சிறிய பிம்பத்தைச் செய்துவைத்து அவ்வுருவங்களில் அந்தந்த மூர்த்திகளை ஆவாகனம் செய்யவேண்டும்.)

பருப்பு, நெய், சர்க்கரை என்பன சேர்ந்த மாவினுல் செய்த அப்பமும், நெய், சர்க்கரை என்பன சேர்த்த தோசையும் நைவேத்தியம் செய்து மாவிளக்கேற்றிவைத்து சுமங்கலி பூஜையும் செய்யவேண்டும்.

இவ்விதம், ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் செய்யவேண்டும். நிவேதனப்பொருள் ஏகோத்தர விருத்தியாக அதிகரித்துச் செல்லும். அதாவது முதல் மாதத்தில் (கார்த்திகை) ஒரு தோசை, இரண்டு மாவிளக்கு இரண்டாம் மாதத்தில் (மார்கழி) இரண்டு தோசை, இரண்டு மாவிளக்கு என்றிப்படி முப்பத்து மூன்று பௌர்ணமிகளுக்குத் தொடர்ந்து செய்யவேண்டும்.

இந்த மாவிளக்கு, தோசை என்பனவும் சுமங்கலிகளுக்கே தானமாக வழங்கப்பட வேண்டும்.

## திருவெம்பாவை (பாவை நோன்பு)

திருவாதிரை நட்சத்திரம் சிவனுக்குரியது. விசேஷமாக மார்கழித் திருவாதிரை நடேசராபிஷேக நாளாகவும் சிவவிரதங்களுள் ஒன்றுகவும் உள்ளது. இதுபற்றி கட்டுரையில் வேறிடத்திலும் காண்க.

இத் திருவாதிரைக்கு முந்திய பத்து நாட்களும் திருவெம்பாவை விரதமாகக் கொள்ளப்படுகிறது. இது மிகப்பழைய காலத்திலிருந்து பெண்களால் அநுஷ்டிக்கப்பட்டுவரும் ஒரு விரதமாகும். ஆதியில் இது பாவைநோன்பு என்று சொல்லப்பட்டுவந்தது.

மார்கழி மாதம் தேவர்களின் புலர்காலைப் பொழுது என்பதால் இம்மாதம் முழுதுமே இறைவழிபாட்டுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பீடைமாதம் என்று கூறி ஏனைய நற்காரியங்களுக்கு எடுக்கப்படாமல் தவிர்க்கப்பட்டதன் காரணம் இதுவே. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று கூறியதிலிருந்தே மார்கழி மாதச்சிறப்பு உணரத்தக்கது.

மார்கழி மாதம் முழுவதுமே பனிக்குளிரையும் பொருட்படுத்தாது மிக அதிகாலையிலேயே எழுந்து நீராடி ஆலயம் சென்று திருவெம்பாவை திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலியபாடல்களைப்பாடி வணங்குவர். ஆலயங்களில் இம்மாதம் முழுவதும் விசேஷ அதிகாலைப் பூஜைகள் நடைபெறும்.

அக்காலத்தில் பெண்கள் நாட்டின் வளம் கருதி மழை வேண்டியும், தமது நல்வாழ்க்கைச் சிறப்புக்கருதி நல்ல கணவனை வேண்டியும் இப்பாவை நோன்பினை அநுஷ்டித்துவந்தனர். அதிகாலை துயிலெழுந்து ஏனைய பெண்களையும் பாடிப்பாடி அழைத்துக்கொண்டு கூட்டமாகக் குளத்திற்குச் சென்று நீராடி இறைபுகழ்பாடி வழிபாடுகள் நிகழ்த்தி விரதமிருந்தனர்.

(19-ம் பக்கம் பார்க்க)

# இடப லக்கின ஆணும்
# சிங்க லக்கின் பெண்ணும்
# சேர்வது தீமையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

சிங்க லக்னகாரி தன் நம்பிக்கையும், தன் நிறைவுமுள்ளவள். ஆனால் அவளுடைய பெலயீன நேரங்களில் இடபகாரன் ஒருநல்ல சோடியாவான். அவனுடைய குணாதிசயவன்மையும், பொது அறிவும் அவளுக்கு ஒரு உதவியாயிருக்கும். அவள் இன்னுமொரு பலம் குறைந்தவருடன் தொடர்பிருந்தால், இந்த உறவு அவளுக்கு ஒரு திரும்பி உதைக்கும் கட்டமாகும். வழக்கமாக ஒரு பிரத்தியேகமானவர், நிதானமானவர். அவளுடைய வெளிப்போகும் இயல்புக்கு ஒத்துப்போகக் கூடியவர். தனித்தனி அபிப்பிராயத்தில் பிடிவாதமுள்ள தன்மைதான் இடறுகட்டையாகவிருக்கும். அவன் தான் சரி என்று எப்பகுதியார் நம்பினாலும் அவனுடைய மனதை மாற்றியமைக்க முடியாமல், பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும். ஒருவரை ஒருவர் மாற்ற எண்ணாமல் இருந்தால் இந்த உறவைத் தொடங்குவது நல்லது. சூழ்நிலைக்கு தகதங்களை மாற்றிக் கொள்ளக்கூடிய இருவரைக் காண்பதரிது. பொருளாதாரத்தில் ஸ்திரம் பெற்ற இடபகாரர் கடன்பட நேரிடும். அதிலிருந்தும் தன்னைப் பாதுகாக்க முடியாது. ஏனெனில் சிங்ககாரியின் டாப்பீகத்துக்கும் செலவிற்கும் ஈடு செலுத்த முடியாது. இதைக் கட்டுப்படுத்தினால் அவளுக்கு மகாகோபம் பொங்கிவிடும். வீட்டு வாழ்க்கைகரிசனை இருபகுதியாலும் வரவேற்கப்படும்.

கீழ்முறையான ஒரு இடபகாரரை அவள் ஆதரித்தால் அவள் துர்ப்பாக்கியசாலியாவாள். ஏனெனில் அவனுடைய பிடிவாதகுணம், சோம்பேறித்தனம், பெருந்தீனித்தனம் இவைகளை அவள் சகிக்கமாட்டாள். இவற்றுடன் அவனுடைய பொறாமையும் சேர்ந்தால் வழக்கமாக கீழ்ப்படிவானவளை வேறு ஒருவனுடைய படுக்கைக்கு அனுப்பிவிடும்.

இடபகாரரின் மிதமிஞ்சிய பாலியல்பு அவளும் அதேபோல் இருப்பதால் ஒரு பிரச்சினையையும் எழுப்பாது. அவர்களுடைய பாலியல்பு நேரடியானதால், திருப்தியானதால் படுக்கைக்கு வெளியில் பிரச்சனை தோன்றுமல்லாது உள்ளே பிரச்சனையில்லை.

சாதாரணமாக பிணக்கான குணாதிசயங் கொண்ட இணைப்பே.





துரித சலவைக்கும், பளிச்சிடும் வெண்மைக்கும் நீலம் கலந்த மில்க்வைற் சலவைப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

50 கிராம் சிறிய பைக்கற் ஒன்று ரூபா 2-50 மட்டுமே.

'மில்க்வைற் சலவைப் பவுடர்' பல அளவுகளில் எங்கும் விற்பனையாகிறது.

பாவித்த வெற்றுப் பைக்கற்றுகளை சேகரித்து அனுப்பி பல உயரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

# ஆய்வு மன்றம்

க. பத்மா, தும்பளை, பருத்தித்துறை.

உங்கள் ஜாதகத்தில் 4ல் சனி வக்கிரமடைந்திருப்பினும் அவர் செவ்வாயின் நட்சத்திரத்திலிருப்பதாலும், செவ்வாய் இலக்கினத்திலிருப்பதாலும், சந்திரன் பாவநிலைப்படி 11ல் பொருந்துவதாலும் ஜாதகர் தாயாரைக் கவனிக்கும் மனப்பான்மை கொண்டிருப்பார். தர்மகர்மாதிபதிகள் ஒன்றுகூடியிருப்பது ஜாதகருக்கு முன்னேற்றகரமான பலன்களைக் காட்டும்.

க. பிரேமா, தும்பளை, பருத்தித்துறை.

தங்கள் ஜாதகப்படி இராகு கேதுக்களுக்கிடையில் எல்லாக் கிரகங்களும் அமைந்திருப்பினும் இலக்கினம் அதற்குள் அமையாதிருப்பதால் தாகிகங்கள் ஏற்படுவது குறைவாகும். கல்வி, செல்வம் முதலியன சிறப்படையும்.

பா. தமிழ்ச்செல்வி, கொடிகாமம்.

இவவின் ஜாதகப்படி 1990-11-2 முதல் 20 வருடங்களுக்கு வெள்ளிதசை நிகழும். வெள்ளி இவருக்கு யோககாரகனுகி 10-ம் வீட்டில் ஆட்சிப் பெற்றிருப்பதால் சிறப்பான பலன்களை நல்கும். கல்வி விருத்தி, பெரியோர் மதிப்பு, நினைத்தலை அனுகூலமாதல் போன்றன உண்டு.

அ. சிவபாதம், கொழும்பு-4.

தங்கட்கு தற்போது சுக்கிரதசையில் ராகு புத்தி 1990-3-22 வரை நிகழும். 7-ம் வீட்டையும் 7-ம் அதிபனையும் சனி திருஷ்டிப்பதால் திருமணம் இழுபறி நிலையிலேயே இருக்கும். எனினும் 1990-3-22ன் மேல் வரும் சுக்கிரதசை குரு புத்தியில் மணவாழ்க்கை கிடைக்கும்.

சி. சிவகுமார், பிரதான வீதி, மூதூர்.

தங்கள் விண்ணப்பப் படிவத்தில் பிறந்த நேரம், தசாபுத்தி போன்றன குறிப்பிடப்படாமையினுல் பலாபலன்கள் ஆராய முடியாது.

எஸ். சிவா, மாத்தளை,

தங்கள் ஜாதகப்படி களத்திர காரகனுன வெள்ளி 8ல் இருப்பதாலும், 7-ம் வீடு சனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட வீடாக இருப்பதாலும் மனநிறைவுடன் திருமணம் கைகூடாது. மன விரக்தி காட்டும்.

அ. சிவப்பிரகாசம், கொழும்பு-4.

தங்கள் ஜாதகப்படி உதயலக்கினம் மகரமாகி லக்கினுதிபதியான சனி பகவான் 2-ம் வீட்டில் ஆட்சிப்பெற்று, வியாழனுல் திருஷ்டிக்கப்படுவது ஆயுட்பெலத்தைக் காட்டுகின்றது. எனவே மத்திம ஆயுள் என்று கூற இடமில்லை, 60 வயதுக்கு முன் மரணம் சம்பவிக்க அனுகூலமில்லை.

அ. ஜெகதீசன், செங்கலடி.

நீங்கள் இம்முறை தோற்றும் பரீட்சையில் சித்தியடையக்கூடிய நிலை தென்படுகிறது.

வா. நவரத்தினராசா, தங்கோடை, காரைநகர்.

தங்கட்கு லக்கினுதிபதி, 4-ம் வீட்டதிபதி புதன் ஆட்சிப்பெறுவதால் கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. இருப்பினும் 2-ம் அதிபனை சனி பகவான் திருஷ்டிப்பதால் கல்வியில் இடையிடையே தடை, தாமதங்கள் காட்டக்கூடும். தற்போது கேதுதசை நடக்கின்றது. கேது 6ல் இருப்பதால் சிறப்பான பலன்கள் கொடுக்கமாட்டாது. 1990-3-16இன்மேல் கேதுதசை சனிபுத்தியில் முன்னேற்றமான பலனைப் பெறுவீர்கள்.

சா. டெலிசியா, யாழ்ப்பாணம்.

எதிர்வரும் பரீட்சையில் நற்பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்வி வாய்ப்புகளை அடைவீர்கள்.

ந. த. ஸ்ரீதரன், நல்லூர், யாழ்ப்பாணம்,

உங்கள் ஜாதகப்படி 1988-6-7 வரையும் சூரியன் தசை நடைபெற்றது. சூரியன் 12-ம் வீட்டில் இருப்பதனுல் அத்தசையில் நற்பலன்கள் கிடைத்திருக்கமாட்டாது. 1988-6-7 முதல் சந்திரதசை ஆரம்பித்துள்ளது, அதில் 1989-4-7 முதல் சந்திர தசையில் செவ்வாய் புத்தி நடக்கின்றது, சந்திரன் 9லும் செவ்வாய் 12-ம் அதிபதியாகவும் இருப்பதனுல் அந்நிய நாட்டுப் பிரயாணத்துக்கு வாய்ப்பானதாகவுள்ளது. முயற்சி செய்தால் பிரயாணம் அனுகூலமாகும்.

க. கணேசமூர்த்தி, இடைப்பிட்டி, காரைநகர்.

இவரது கிரகநிலைப்படி 2-ம், 4-ம் வீடுகள் நன்ருக இருப்பதனுல் கல்வியில் முன்னேற்றமுண்டு. அனேகமாக ஆகஸ்ட் பரீட்சையில் நற்பெறுபேறு கிடைக்கலாம். 10-ம் வீட்டை குரு திருஷ்டிப்பதால் ஆசிரியத் தொழில் கிட்டலாம். தற்போது சனிதசையில் புதன் புத்தி நிகழ்கிறது, புதன் 2-ம் வீட்டதிபனுக இருப்பதால் கல்வி நன்கு அமையும்.

மட்டுவில் வடக்கு

# ஆரோக்கியவாசக வைத்தியசாலையின்

# 25 ஆண்டு சேவை

# வெள்ளி விழாவும்

## வைத்தியர் பே. பிலிப்ஸ் J.P. அவர்களின்

# மணிவிழாவும்

## 23-05-1989

- ★ மரம் நாட்டு வைபவம்
- ★ மாணவர் உதவித்திட்டம்
- ★ மருத்துவ ஆய்வரங்கு
- ★ விதவைகள் உதவித்திட்டம்
- ★ மலர் வெளியீடு
- ★ பொதுக்கூட்டம்

☞ இன்னிசை நிகழ்ச்சிகள் ஆதியன இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. விழாக் குழுவினர்.

Edited by K Sathasiva Sarma; Printed and Published by S Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka, Phone: 280